# வக்கீல்

658

## பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை




பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL • TAMIL LAW MAGAZINE**

# "வக்கீல்"

## பொது மக்களுக்கான உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்: கேள்வி—பதில்: வரிகள்: தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
" V. தியாகராஜன், B.A., B.L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன், B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ஆசிரியர்]

---

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

---

## "வக்கீல்"

### (விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

---

# தமிழில் சட்டப் புத்தகங்கள்

### "வக்கீல்" பிரசுரங்கள்

**"வக்கீல்" 1953-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை ரூ. 3 12 0

**"வக்கீல்" 1952-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

**"வக்கீல்" 1951-ம் வருடம்** பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

**சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்** [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

**தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்** [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்] ரூ. 0 6 0

**சரக்கு விற்பனைச் சட்டம்** [The Indian Sale of Goods Act] ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்
வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)

V. S. & Sons

**SWEETS**

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள்

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 6 — ஸெப்டம்பர் 1954 — இதழ் 9


அமெரிக்காவின் கண்பன் 3

திருமண வயது 3

புதிய சட்டங்கள் 4

சென்னை நிலவரி (ஸர்சார்ஜ் சட்டம்) 6

வழக்கும் தீர்ப்பும்

* வீண்வியாஜ்யத் தடைச் சட்டத்தின்படி ஸ்ரீமதி எம். எ. ஜானகி என்பவர் மீது சென்னை ஹைகோர்ட்டாரின் உத்தரவு. 9

* 'புரோக்கர்களும்' விற்பனை வரியும். 10

* சென்னை கட்டடங்களின் ஜாகை—வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம். சர்க்கார் அளித்த விதி விலக்கு செல்லவில்லை. 10

* 'அரெஸ்டு' செய்யப்பட்டவர் கோர்ட் உத்தியோகஸ்தரைப் பின் தொடர மறுத்தார். 11

* தஞ்சைச் சட்டம்—சொந்த நிலமும் டிரஸ்டி பாத்தியமுள்ள நிலமும் சேர்ந்து 3 வேலி புஞ்சைக்குமேல் இருந்தால், அவருக்குத் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் உண்டா? 11

* வழக்கில் வசூலாகும் தொகையில் தமக்குப் பாதி வீதம் கொடுக்கவேண்டுமென்று கட்சிக்காரருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு 'கேஸ்' நடத்திய வக்கீலின் நடத்தை தவறானது; வக்கீல் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டார். சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு. 12

தொழிற்சாலைச் சட்டம் 14

கேள்வியும்—பதிலும் 17

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 20



ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஸ்தாபிதம் 1941




ரிஜிஸ்டர் நெ. 152070

ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
Pro: A. சின்னக்கனி நாடார் டோர் நிர். 7.
செம்பர் 1 போலீஸ் ஸ்டேஷன் சந்து,
மதுரை.

# மூர்த்தி ஸ்டோர்

செம்பனூர்கோவில்
(மாயூரம் தாலுக்கா)

எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & கிராமபோன் சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.

சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.

உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
# சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

187734

மலர் 6 — செப்டம்பர் 1954 — இதழ் 9

## அமெரிக்காவின் நண்பன்!

ஆசிய நாடாகிய இந்தோ சைனாவில் பல வருடங்களாக நடந்துகொண்டிருந்த யுத்தத்தை நிறுத்துவதுபற்றி ஜினீவா மகாநாட்டில் அமெரிக்காவின் அபிப்பிராயத்தை மற்ற நாடுகள் ஒன்றும் சட்டை செய்யவில்லை. ஆதனால்தான் அங்கு ராஜி ஏற்பட்டதென்று கூடச் சொல்லலாம். அடுத்தபடியாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சேனைகளை எல்லாம் ஒன்றுசேர்த்து ருஷ்யாவுக்கு எதிரடையாகப் பாய்ந்து போராடத் தயாராக வைத்திருக்கவேண்டுமென்று அமெரிக்கா சில நாட்களாக ஒரு திட்டம் வகுத்திருந்தது. இதைப்பிரட்டன் முதலிலேயே ஏற்கவில்லை. இப்பொழுது பிரஞ்சுமக்களும் இத்திட்டதைநிராகரித்து விட்டனர் அத்திட்டம்புகைந்துபோயிற்று. பிறகு அமெரிக்கர்கள் தென் ஆசிய நாடுகளை, செஞ்சீனா, ருஷ்யா, இவர்களிடமிருந்து காப்பாற்ற முயன்றனர். இதற்காகத் தென் ஆசிய நாடுகளாகிய இந்தியா, பர்மா, சிலோன் இவர்களை மணிலாவுக்கு வந்து கூடித் தங்களுடன் ஆலோசனை செய்யும்படி அழைத்தனர். இதற்கு இந்தியா சம்மதிக்கவில்லை. சிலோனும், பர்மாவும் இந்தோனீசியாவும் கூட இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ள வில்லை. மணிலா மகா நாட்டின் முடிவு அது கூடுவதற்கு முன்பே தெரிந்து விட்டது. அமெரிக்காவை ஐரோப்பிய நாடுகளும் நம்பவில்லை; ஆசிய நாடுகளும் நம்பவில்லை. ஆகவே அமெரிக்காவின் நண்பன்—அணுகுண்டு ஒன்றுதான்!

## திருமண வயது

பாலிய விவாகத்தடைச் சட்டம் என்பது இந்தியப் பிரஜைகள் யாவருக்கும் பொருந்தும் சட்டமாகும். இச்சட்டப்படி மணமகன் 18 வயது பூர்த்தியான வாரகவும் மணமகள் 15 வயது பூர்த்தியானவளாகவும் இருத்தல் வேண்டும். இந்துக்கள், முஸ்லீம்கள் யாவரும் அவரவர்களுடைய மதாசாரப்படிக்கும் பழக்கவழங்களின் படிக்கும் செய்துகொள்ளும் திருமணங்களிலும் திருமண தம்பதிகளுக்கு மேற்கண்டபடி வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

ஆனால் பதிவுத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு ஒந தனிச் சட்டம் இருக்கிறது. இதற்கு விசேஷ விவாகச் சட்டம் எனப்பெயர். இப்போது அமுலில் உள்ளவிசேஷ விவாகச் சட்டத்தை ரத்து செய்து அதற்குப் பதிலாக புதிய விசேஷ விவாகச்சட்டம் ஒன்றை நமது பார்லிமெண்ட் சபையார் இயற்றி வருகின்றனர். பார்லிமெண்ட்டின் மேல் சபையாகிய ராஜ்ய சபையில் பதிவுத்திருமணத்தம்பதிகள் இருவரும் 21 வயது பூர்த்தியானவர்களாக இருக்கவேண்டுமென்று ஒரு ஷரத்தை ஏற்படுத்தினர். அம்மசோதாவானது 'லோக்சபை' எனப்படும் மக்கள் சபையில் விவாதிக்கப்பட்ட போது, மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியானால் போதும், அவர்கள் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாமென அந்த ஷரத்தை மாற்றி விட்டனர்.

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

**18. சொந்தக் காடுகள் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.**

(Madras Preservation of Private Forests - Second Amendment Act 1954. (4-8-1954) சென்னை ராஜ்யத்தில் ஜமீன் இனாம் எஸ்டேட்டுக்களில் உள்ள சொந்தக் காடுகளையும் மலையாளம் தென்கன்னடம் ஜில்லாக்களில் ஒரே நபருக்கோ பல நபர்களுக்குப் பொதுவாகவோ 100 ஏகராவுக்குமேல் தொடர்பாக இருக்கும் காடுகளையும் அவைகளின் சொந்தக்காரர்கள் அழிக்காமலும் பராதீனங்கள் செய்யாமலும் தடுக்க 1949ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் ஷரத்துக்கள் சில திருத்தப்பட்டிருக்கின்றன. "ஒரே நபருக்கோ, பல நபர்களுக்குப் பொதுவாகவோ"—என்ற வார்த்தைகள் எடுக்கப்பட்டு விட்டன. அதாவது பல நபர்களுக்குத் தனித்தனியே சொந்தமாக இருந்தாலும் சேர்ந்தாப்போல் 100 ஏகர்களுக்குக் குறையாமல் இருக்கும் சொந்தக் காடுகளுக்கும் இச்சட்டம் உண்டு என்று ஏற்படுகின்றது. ஆனால் 14-12-1949 தேதிக்குமுன் தாற்காலிகமாகவோ, வேறு விதமாகவோ அதன் சொந்தக்காரரால் சாகுபடிக்குக்கொண்டு வரப்பட்ட நிலங்களுக்கு இச்சட்டம் பொருந்தாதென்றும் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. 100 ஏகருக்கு மேற்பட்ட விஸ்தீர்ணமுள்ள காட்டின் நடுவில் உள்ள இடங்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்தாலும், மரங்கள் வெட்டப்பட்டிருந்தாலும், நடுநடுவே பாறைகள், பாட்டைகள், ஏரிகள் ஆறுகள் முதலிய இருந்தாலும் பாதகமில்லை; அவ்விதக் காடுகளுக்கும் இச்சட்டம் உண்டு. அவை தொடர்பாக 100 ஏகருக்குமேல் விஸ்தீர்ணமுள்ள காடுகளாகவே பாவிக்கப்படும். செக்ஷன் 3-ம் திருத்தப்பட்டிருக்கிறது. 16-8-1946 தேதிக்குப்பின் கலெக்டருடைய அனுமதியின்றிச் செய்யும் பராதீனங்கள் செல்லா என இருந்த ஷரத்து இத்திருத்தச் சட்டத்தால் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. வெவ்வேறு வகை சொந்தக்காடுகளுக்குப் பராதீனத் தடைத் தேதி வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டத்தால் புதிதாக மலையாளத்திலும் தென்கன்னடம் ஜில்லாவிலும் இச்சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்ட காடுகளை 24-6-1953 தேதியிலோ அதற்குப் பிறகோ கலெக்டருடைய அனுமதியின்றி செய்யப்படும் பராதீனங்கள் செல்லா. மேலும் புதிதாக சர்க்காரால் இச்சட்டத்திற்குள் கொண்டு வரப்படும் காடுகளை அது சம்பந்தமான சர்க்கார் அறிக்கை அமுலுக்கு வரும் தேதிக்குப்பின் செய்யப்படும் பராதீனங்கள்தான் செல்லமாட்டா.

மற்றக் காடுகளைப்பற்றிய பராதீனங்கள் 16-8-1946 அல்லது அதற்குப் பின் (கலெக்டருடைய அனுமதியின்றி) ஏற்பட்டிருந்தால் அவை செல்லா எனவும் 1949-ம் வருடத்திய சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

**19. சென்னை நிலவரி (ஸர்சார்ஜ்) சட்டம்**

Madras Land Revenue Surcharge Act 1954. (18-8-1954) இச்சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

**20. சென்னைப் பொது விற்பனை வரி இரண்டாவது திருத்தச் சட்டம்.**

Madras General Sales Tax Second Amendment Act 1954, (23-8-1954) விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3 (2) என்ற ஷரத்து மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக இப்போது செக்ஷன் 3 (1) ஷரத்துப்படி ரூபாய் ஒன்றுக்கு காலணா வீதம் வரி விதிக்கத்தக்க எல்லா வியாபாரிகளும் கொடுக்கவேண்டிய விற்பனை வரி தவிர கீழே கண்ட சாமான்களின் விற்பனைக்கு ஒரு கட்டத்தில் மட்டில் அடியில் கண்டபடி ஒரு அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது;—

(1) பட்டு, செயற்கைப்பட்டு, கம்பளம், சணல், அல்லது பருத்தியல்லாத வேறு ஒரு சரக்கைக்கொண்டு ஆலைகளில் தயாரிக்கப்பட்ட துணியின் விற்பனைக்கு ரூ. 1-க்கு ஒரு அணா மூன்று தம்பிடி வீதம் வரி. கரை நீங்கலாக அத்துணியில் உபயோகிக்கப்பட்ட பாவு நூலானது ஒற்றையாகவோ மடிப்புள்ளதாகவோ 17 கவுண்ட் அல்லது இன்னும் நேர்த்தியான நூலாக இருந்தால்தான் இவ்வரி உண்டு.

(2) ஆலைகளில் தயாரிக்கப்பட்ட பருத்தி ஜவுளி விற்பனைக்கு ரூ. 1-க்கு ஒரு அணா மூன்று தம்படி வீதம் வரி. இப்பருத்தித் துணியிலும் கரை நீங்கலாக உபயோகிக்கப்பட்ட பாவு நூலானது (ஒற்றையாகவோ மடிப்புள்ளதாகவோ) 35 கவுண்ட் அல்லது இன்னும் நேர்த்தியான

னூலாக இருந்தால்தான் இவ்வரி உண்டு.

(3) ரத்தினங்களின் (Precious Stones) விற்பனைக்கு ரூ. 1-க்கு ஆறு தம்பிடி வீதம் வரி. ஒரு வருடத்தில் ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் மொத்த வியாபாரம் செய்யும் காரணத்தினுல் விற்பனை வரி விதிக்கத்தக்க எந்த வியாபாரியானவர் சென்னை ராஜ்யத்தில் மேற்கண்ட சாமான்களை முதல் தடவையாக விற்பனை செய்கிருரோ அவ்வியாபாரி மட்டில்தான் இவ்வதிக வரியையும் கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு அதே சாமான்களை விற்பனை செய்யும் எந்த வியாபாரியும் இந்த அதிக வரியைக் கொடுக்கவேண்டியதில்லை. அயல் நாடுகளிலிருந்தோ, இந்தியாவில் வேறு ராஜ்யங்களிலிருந்தோ இந்தச் சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்டால், அவ்விதம் இச்சாமான்கள் சென்னை ராஜ்யத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பிறகு எந்த வரி விதிக்கத்தக்க வியாபாரியானவர் இவற்றை முதல் தடவையாக விற்பனை செய்கிருரோ அவர் மட்டில்தான் இவ்வரியைக் கொடுக்கவேண்டும்.

இச்சாமான்களை விற்பனை செய்யும் வியாபாரியானவர், சென்னை ராஜ்யத்தில் அவற்றை முதல் தடவையாகத் தாம் விற்கவில்லை என்ருே, அல்லது அவை சென்னை ராஜ்யத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பிறகு முதல் தடவையாக அவற்றைத் தாம் விற்கவில்லை என்ருே சொன்ஞல் அதை ருசுப்பிக்கவேண்டியது அவருடைய கடமையாகும்.

## 21. பொது நூல் நிலையச் சட்டத் திருத்தம்.

Madras Public Libraries Amendment Act 1954. (24-8-1954) பொது வாசகசாலைகள் ஏற்படுத்துவதைப்பற்றிய சட்டத்தில் செக்ஷன் 9 (e) என்ற ஷரத்து திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தப்பட்ட ஷரத்தின்படி பிரதேச நூல் நிலையக் கமிட்டியார் (Local Library Authority) டைரெக்டர் அல்லது சர்க்காருடைய முன் அனுமதி பெற்று நன்கொடையாகக் கொடுக்கப்படும் புத்தகங்களை ஏற்றுக்கொள்ளவும்; சர்க்காரின் முன் அனுமதி பெற்று நூல் நிலையங்கள் சம்பந்தமான வேறு விதமான நன்கொடைகளையும் நிதி ஏற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 22 ஜில்லாபோர்டு சட்டத்திருத்தம்

Madras District Boards — Second Amendment Act, 1954. (30-8-1954) தேர்தல் சம்பந்தமாக ஜில்லா போர்டுச் சட்டத்தில் சிலபுதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்திருத்தச்சட்ட ஷரத்துக்கள் அடுத்த இதழில் விவரமாக விளக்கப்படும்.

## 23 ஆயில் என்ஜின் அமைப்புத் தற்காலிக அனுமதிச் சட்டம்.

Madras Installation of oil Engines, Temporary Permission — Act 1954 (1-9-1954) முனிசிபாலிடிகளிலோ, ஜில்லா போர்டு எல்லைக்குள்ளோ, அல்லது கிராம பஞ்சாயத்து எல்லைக்குள்ளோ எலெக்ட்ரிக் விசையால் ஓடும் யந்திரங்களை சட்டப்படி ஸ்தாபித்திருப்பவர்கள் அந்த யந்திரங்களை ஓட்ட 'ஆயில் என்ஜின்' வைத்துக்கொள்ள வேண்டுமென்று மனுப்போட்டால் அவ்விதம் ஆயில் என்ஜின் வைத்துக்கொள்ள அனுமதிகொடுக்கச் சென்னை சிடிகமிஷனருக்குப், முனிசிபல் கவுன்சில்களுக்கும் ஜில்லா போர்டுகளுக்கும் கிராம பஞ்சாயத்துக்கும் இச்சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏற்கனவே இவர்களுக்குச் சட்டபூர்வமாக இவ்வதிகாரம் இல்லாதிருந்தும் சர்க்காரின் உத்தரவின் பேரில் இவர்கள் மேற்கண்டபடி தாற்காலிக அனுமதி கொடுத்து வந்திருக்கிருர்கள். அவ்விதம் கொடுக்கப்பட்ட அனுமதிகளும் அந்தந்த அனுமதித்தேதியிலிருந்து ஒரு வருடம்வரை செல்லுமென்றும் அவ்வனுமதிகளும் சட்டபூர்வமாகக் கொடுக்கப்பட்ட அனுமதியாகவே பாவிக்கப்பட வேண்டுமென்றும் இச்சட்டத்தில் ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மின்சார விசையில் அடிக்கடி குறைவு ஏற்படும் நிலைமையை சமாளிக்கவே இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.



# சென்னை நிலவரி (ஸர்சார்ஜ்) சட்டம்.

1954-ம் வருடத்திய 19-வது சென்னைச்சட்டம். Madras Land Revenue (Surcharge) Act 1954. இச்சட்டம் சென்னை சட்டசபையால் இயற்றப்பட்டு 7-8-1954ல் ஜனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு 18-8-1954 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டம் சென்னை ராஜ்யம் முழுவதிலும் 1-7-1954 தேதி முதல் அமுலில் இருக்கும்.

இச்சட்டத்தின் செக்ஷன் 3-ன்படி — சர்க்காருக்கு ஒருபசலியில் ரூ. 500க்குமேல் சென்னை ராஜ்யத்தில் தாம் வைத்திருக்கும் நிலங்களுக்கு நிலவரி கொடுக்க வேண்டிய "நிலச்சொந்தக்காரர்" (Land-holder) ஒவ்வொருவரும், அவரால் செலுத்தப்படவேண்டிய நிலவரி தவிர, அடியில் கண்டபடி "ஸர்சார்ஜ்" (Surcharge) என்ற ஒரு அதிகவரியையும் அவர் சர்க்காருக்கு ஒவ்வொரு பசலியிலும் கொடுக்கவேண்டும்.

அதாவது:—

**நிலவரித்தொகை. ஸர்சார்ஜ்வீதம்.**

(a) நிலவரியில் முதல் ரூ. 250க்கு……இல்லை

(b) நிலவரியில் அடுத்த ரூ. 250க்கு…………
ரூ 1க்கு அணா 2.

(c) நிலவரியில் அடுத்த ரூ. 500க்கு…………
ரூ. 1க்கு அணா 4.

(d) நிலவரியில் பாக்கி உள்ள ஜாடாவுக்கும்…
ரூ. 1க்கு அணா 8.

"வஜா" (ரிமிஷன்) செய்யப்பட்ட நிலவரியைக் கணக்கில் சேர்க்கவேண்டியதில்லை. அதாவது எந்த பசலியிலாவது நிலவரி "வஜா" செய்யப்பட்டிருந்தால் "வஜா" செய்யப்பட்டது போக பாக்கி கொடுக்கவேண்டிய நிலவரியின் மீது 'ஸர்சார்ஜ்' கொடுக்கப்படவேண்டும்.

## நிலச் சொந்தக்காரர் தாம் கொடுக்க வேண்டிய மொத்த நிலவரியைப் பற்றிய தகவல் கொடுக்கவேண்டும்.

தாசில்தாரோ, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரோ அல்லது ஜில்லா கலெக்டரோ அவரவருடைய அதிகார எல்லைக்குள் நிலம் வைத்திருக்கும் எந்த நிலச் சொந்தக்காரருக்கும் நோட்டீசு அனுப்பி அவருக்கு இந்த ராஜ்யத்தில் உள்ள நிலங்களின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றும் அதற்காக அவர் செலுத்தவேண்டிய நிலவரி எவ்வளவு என்றும் தகவல் கேட்கலாம். நோட்டீசில்கண்ட நமூனாப்படிக்கு அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதிக்குள் இவ்விவரங்களை நிலச் சொந்தக்காரர் எழுத்துமூலம் எழுதி உறுதிமொழியுடன் அனுப்பவேண்டும். நிலச்சொந்தக்காரர், மைனர் அல்லது பைத்தியம் போன்ற அருகதைக் குறைவுள்ளவராக இருந்தால் அவருடைய கார்டியனுக்கும்; கோயில் அல்லது மததர்மஸ்தாபனங்களாக இருந்தால் அவற்றின் டிரஸ்டி அல்லது மானேஜருக்கும் மேற்கண்டபடி அதிகாரிகளால் நோட்டீசு அனுப்பப்படலாம். அவர்களும் மேற்கண்டபடி உறுதிமொழியுடன் தகவல் அனுப்ப வேண்டும். (செக்ஷன் 5 (1).)

## சிலர் தாமாகவும் தகவல் அனுப்ப வேண்டும்.

சென்னை ராஜ்யத்தில் ஒரு பசலிக்கு ரூ. 500க்கு மேல் நிலவரி கொடுக்கவேண்டிய ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும், மேலே கண்டபடி அவருக்கு அதிகாரிகளிடமிருந்து நோட்டீசு வராவிட்டாலும் கூடத் தாமாகவே, ஜில்லா கலெக்டருக்கு இத்தகவலைத் தெரிவித்துவிட வேண்டியது கடமையாகும். நிலச் சொந்தக்காரர் எந்த ஜில்லாவில் வசிக்கிறாரோ அந்த ஜில்லா கலெக்டருக்காவது அல்லது நிலமிருக்கும் ஜில்லா கலெக்டருக்காவது இத்தகவல் தெரிவிக்கப்படவேண்டும். இதுசம்பந்தமாக விதிகள் ஏற்படும். இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேதிக்குள் விதிகளில் கண்டிருக்கும் நமூனாப்படி மேற்கண்ட தகவல் அனுப்பப்பட வேண்டும். (செக்ஷன் 5 (3).) இத்தகவல்களை வைத்துக்கொண்டு அதிகாரிக்கு அவை உண்மை என்று தோன்றினால் நிலச் சொந்தக்காரர் கொடுக்கவேண்டிய 'ஸர்சார்ஜ்' எவ்வளவு என்று விதிக்கப்படும். மேற்கண்ட கெடுக்களின்படி நிலச் சொந்தக்காரர் தகவல் அனுப்பாவிட்டாலும்; அல்லது அனுப்பிய தகவல் தவறாகவோ, அரைகுறையாக இருப்பதாக அதிகாரிக்குத் தோன்றினாலும், அவ்வதிகாரிக்கு யுக்தமாகத் தோன்றும்விதம் விசாரணை செய்து நிலச் சொந்தக்காரர் கொடுக்கவேண்டிய 'ஸர்சார்ஜ்' எவ்வளவு என்று அவர் நிர்ணயம் செய்வார். தகவல் கொடுத்தவர்களுக்கு நோட்டீசு அனுப்பி அத்தகவல் சரி என்று ருசுப்பிப்பதற்கு நிலச் சொந்தக்காரருக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட பிறகே அதிகாரி மேலே கண்டபடி 'ஸர்சார்ஜ்' தொகையை நிர்ணயம் செய்வார். (செக்ஷன் 5 (3).)

## பொய்த் தகவல் கொடுப்பது குற்றம்.

மேற்கண்டபடி நிலச் சொந்தக்காரரோ, கார்டியனோ, டிரஸ்டியோ மானேஜரோ அனுப்

பும் உறுதிமொழித் தகவல்களில் பொய் என்று தெரிந்தே அத்தகவலைக் கொடுத்திருந்தாலும், அல்லது உண்மை என்று நம்பாத தகவல்களைச் சொல்லி இருந்தாலும் அது ஒரு கிரிமினல் குற்றமாகும், இக்குற்றத்திற்கு ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம். (செக்ஷன் 5 (4).)

இச்சட்டஷரத்தையோ விதிகளையோ மீறியதான குற்றங்களை முதல் வகுப்புக்குக் குறைந்த அந்தஸ்துள்ள மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிக்கக் கூடாது. மேலும் ரிவின்யூடிபார்ட்மெண்ட்டில் தாசில்தாருடைய அந்தஸ்துக்குக் குறையாத ஒரு அதிகாரியின் பிராதின் பேரில் தான் எந்த கோர்ட்டும் இதுசம்பந்தமான கிரிமினல் வழக்கை ஏற்றுக் கொள்ளலாம். (செக்ஷன் 6.)

## 'ஸர்சார்ஜ்' வசூல் செய்யப்படும் முறை.

இச்சட்டத்தால் விதிக்கப்பட்ட ஸர்சார்ஜ் வரியானது நிலவரியைப் போலவே வசூல் செய்யப்படும். நிலச் சொந்தக்காரருக்குள்ள எல்லா நிலங்களின் ஜவாப்தாரியின் பேரிலும் கொடுக்கப்படவேண்டிய சர்க்கார் வரியாகபாவிக்கப்படும். அந்நிலச் சொந்தக்காரருடைய எல்லா நிலங்களும் அவற்றிலுள்ள கட்டடங்களும், மகசூல்களும் 'ஸர்சார்ஜ்' வரிக்கு ஈடாகக்கருதப்படும். 1864-ம் வருடத்தியச் சென்னை வரி வசூலிப்புச்சட்டத்திலும், 1851-ம் வருடத்திய சென்னைநகர நிலவரிச் சட்டத்திலும் (இது 1867-ம் வருடத்திய 6-வது சட்டத்தால் திருத்தப்பட்டிருக்கிறபடி) கண்டஷரத்துக்களின்படி நிலவரியை எப்படி வசூல் செய்யலாமோ அதே விதம் ஸர்சார்ஜ் வரியையும் வசூல் செய்யலாம். (செக்ஷன் 4.)

## நிலச் சொந்தக்காரர் என்பது யார் ?

இச்சட்டப்படி 'ஸர்சார்ஜ்' வரி கொடுக்கக் கடமைப்பட்டவர் "நிலச் சொந்தக்காரர்" (Land-holder) "நிலச் சொந்தக்காரர்" என்பது யார்யாரைக் குறிக்குமென்று செக்ஷன் 2 (b)ல் விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ரயத்துவாரி செட்டில்மெண்டுப்படிக்கான பட்டாதார்களும், அல்லது வேறு எவ்விதமாகவேனும் நேரில் சர்க்காருக்கு நிலவரி செலுத்தவேண்டியவர்களும் தான் '"நிலச் சொந்தக்காரர்கள்' ஆவார்கள். எந்த நிலங்களைப் பொறுத்து நிலவரி கொடுக்கவேண்டுமோ அந்நிலங்களை அவர்கள் வைத்திருப்பதாக (Lands held) கருதப்படுவார்கள்.

உதாரணமாக:— ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் 23-வது செக்ஷன்படி சர்க்காருக்கு நிலவரி கொடுக்கவேண்டியவர் நிலச் சொந்தக்காரர்தான்.

1930-ம் வருடத்திய மலையாளக் குத்தகை ஏற்பாட்டுச்சட்டம் அமுலில் உள்ள இடங்களில் காணம் தாரும், மாமூலான வெரும் பட்டம் தாரும் தான் நிலச் சொந்தக்காரர்களாக பாவிக்கப்படுவார்கள். அந்நிலங்களின் ஜன்மியானவர் இச்சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் நிலச் சொந்தக்காரராகக் கருதப்படமாட்டார்.

## குத்தகைதாருடன் ஏற்பாடு செல்லாது:

மேலும் இச் சட்டப்படி ஸர்சார்ஜ் கொடுக்க வேண்டிய நிலச் சொந்தக்காரர்கள் எவரும் ஸர்சார்ஜ் வரி முழுமையுமோ ஒரு பாகத்தையோ அவருடைய குத்தகை அல்லது சாகுபடிதார் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டாலும் செல்லாது. அந்த ஒப்பந்தப்படி குத்தகைதார் அல்லது சாகுபடிதாரிடமிருந்து ஸர்சார்ஜ் பூராவையுமோ, ஒரு பாகத்தையோ வசூல் செய்யவும் முடியாது. (செக்ஷன் 2 (b))

## "நிலவரி" என்பது எதைக் குறிக்கும்

இச் சட்டத்தில் "நிலவரி" (Land-revenue) என்பது நிலத்திற்காகச் சர்க்காரைச் சேர வேண்டிய அரசாங்க வரியையும், நிலத்திற்குப் பாசனத்திற்காக விடப்படுகிற அல்லது உபயோகித்துக்கொள்ளப்படுகிற தண்ணீர்த் தீர்வையையும் (Water-Cess) சேர்த்துக் குறிக்கும். வேறு விதமான 'செஸ்' வரிகள் இதில் சேராது. இச் சட்டத்திலேயே நிலச் சொந்தக்காரர் 'ஸர்சார்ஜ்' கொடுக்க வேண்டுமென்று சொல்லும் செக்ஷன் 3. உடன் மூன்று உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக் கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன் கிடைக்குமிடம்:
ராணி ரெங்கய்யர் சன்ஸ்
கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

1006 மங்கி மார்க்
2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்
சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்
கிருஷ்ண விலாஸ்
உதயகிரி விலாஸ்
வாசனை சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பதற்கு மிகச் சிறந்தவைகள்
தயாரிப்பவர்:—
கிருஷ்ண விலாஸ்
336, கீழ மாசிவீதி, மதுரை.
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.
M. ஏகாம்பரம் செட்டியார்,
புரோப்ரைட்டர்.

டிரேட்மார்க் பேடண்ட் & டிசைன்
ரிஜிஸ்டர் மற்றும்
காபிரைட்
விபரத்திற்கு: ரிஜிஸ்டர்
ஐ. ஸி. ஏஜன்ஸி,
225, நாயக்கர் புதுத் தெரு, :: மதுரை.

உதாரணம் (1) A. என்பவர் தமது பெயரில் மாத்திரம் உள்ள பட்டாவின்படி தாம் வைத்திருக்கும்நிலங்களுக்கு ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். A என்பவரும் B என்பவரும் இருவர் பெயரிலும் உள்ள ஒரு கூட்டுப் பட்டாப்படி வைத்திருக்கும் நிலங்களுக்காக அவர்கள் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர்கள். B என்பவரும் C என்பவரும் சேர்ந்து கூட்டுப் பட்டாவின்படி வைத்திருக்கும் நிலங்களுக்கு அவர்கள் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டும். C. என்பவர் 1948-ம் வருடத்திய ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன் 23-ன் படி ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். இச் சட்டப்படி A, B, C, மூவரும் 'ஸர்சார்ஜ்' வரி கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்.

உதாரணம். (2):—A என்பவர் தம் பெயரில் மட்டும் உள்ள ஒரு பட்டாவின் படி வைத்திருக்கும் நிலங்களுக்கு அவர் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். ஒரு மைனரின் கார்டியன் என்ற முறையில் அவர் வைத்திருக்கும் நிலங்களுக்கு அவர் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். A என்பவருக்கு 'ஸர்சார்ஜ்' கிடையாது. அவர் சொந்த முறைமையிலும் 'ஸர்சார்ஜ்' கொடுக்க வேண்டியதில்லை; கார்டியன் முறைமையிலும் கொடுக்கவேண்டியதில்லை.

உதாரணம். (3) A என்பவர் தம்முடைய சொந்தப்பட்டா நிலங்களுக்கு ரூ. 300 நிலவரி கொடுக்கவேண்டியவர். ஒரு கல்வி ஸ்தாபனத்தின் டிரஸ்டி முறைமையில் அவரிடமிருக்கும் நிலங்களுக்கு அவர் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். மேலும் ஒரு சத்திரத்தின் டிரஸ்டி என்ற முறைமையில் அவரிடமிருக்கும் நிலங்களுக்கு அவர் ரூ. 300 நிலவரி கொடுக்க வேண்டியவர். A என்பவர் சொந்த முறையிலோ, கல்வி ஸ்தாபன டிரஸ்டி முறைமையிலோ, அல்லது சத்திரத்தின் டிரஸ்டி என்ற முறைமையிலோ "ஸர்சார்ஜ்" கொடுக்க வேண்டியவரல்ல.

## விதிகள்

இச்சட்டத்தை அமுல் நடத்தவேண்டியதற்குத் தேவையான விதிகளைச் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. (செக்ஷன் 7.)



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## வீண் வியாஜ்யத் தடைச் சட்டத்தின்படி ஸ்ரீமதி எம். ஏ. ஜானகி என்பவர் மீது சென்னை ஹைகோர்ட்டாரின் உத்தரவு.

வீண் வியாஜ்யத் தடைச் சட்டம் (Vexatious Litigation-Prevention-Act 1949) என்பது சென்னைச் சட்டசபையால் இயற்றப்பட்ட 1949ம் வருடத்திய 8-வது சட்டம். வீண் வியாஜ்ய விவகாரங்களையே பழக்கமாய் வைத்துக் கொண்டிருப்பவர்களைக் குறித்து இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தகுந்த காரணங்கள் இல்லாமல் ஒருவர் வழக்கமாய் சிவில் அல்லது கிருமினல் கோர்ட்டுகளில் வீண் நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருந்தால், அவர் அப்படிச் செய்துவருகிறார் என்று சென்னை அட்வகேட் ஜெனரல் ஹைகோர்ட்டில் மனுப் போடலாம். ஹைகோர்ட்டார் அந்நபருக்கு நோட்டீசு அனுப்பி, அவர் கட்சியைக் கேட்டு, அவர் அப்படி வீண் வியாஜ்யங்களில் ஈடுபடுபவர் என்று தோன்றினால் அவர் ஹைகோர்ட்டாருடைய உத்தரவு அன்னியில் சென்னைமாநகரிலும், அந்தந்த ஜில்லா ஜட்ஜின் உத்தரவு அன்னியில் மற்ற இடங்களிலும் சிவில் அல்லது கிரிமினல் விவகாரங்கள் தொடரக் கூடாதென்று உத்தரவு செய்யலாம். அதாவது இவ்விதம் ஒருவர் பேரில் உத்தரவு பிறந்த பிறகு, அவர் எந்த விவகாரம் போடவேண்டியிருந்தாலும், மேற்கண்டபடி முன்னதாகவே கோர்ட்டின் அனுமதி பெற்றுத்தான் தொடங்க வேண்டும். அனுமதியில்லாமல் அந்நபர் தொடங்கும் வியாஜ்யங்கள் முதலெடுப்பிலேயே தள்ளுபடியாகும். அந்நபர் கொடுக்க உத்தேசித்திருக்கும் விவகாரத்திற்குத் தகுந்த ஆதாரங்களிருந்தால்தான் அதைத் தொடங்க அனுமதி கொடுக்கப்படும். இதுதான் அச்சட்டத்தின் விஷயம்.

இச் சட்டப்படி ஸ்ரீமதி எம். ஏ. ஜானகி என்பவர் மீது ஒரு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று சென்னை அட்வகேட் ஜெனரல் ஹைகோர்ட்டுக்கு மனுச் செய்துகொண்டார். இம்மனுவை பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும் உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்களும் விசாரணை செய்தனர். இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டவர் வீண் விவகாரங்களில் ஈடுபடுவதாக ருசுவாயிற்று. உதாரணமாக இவர் ஒரு டிராமா கம்பெனிமீதும், ஒரு பிரசித்திப்பெற்ற சபையார் மீதும் ரூ 10,000 அவர்களிடமிருந்து தமக்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டுமென்று ஒரு பாபர் வியாஜ்யம் தொடர்ந்தார். ஏனென்றால் இவர்கள்போட்ட டிராமாவானது இக்காலத்திய கல்வி பயின்ற பெண்களைப் பற்றிய ஒரு அவதூறாக இருக்கிறதென்றும், ஆகையால் தமக்கு அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு அவர்கள் நஷ்டஈடு கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்றும் அத்தாவா. இம்மாது போட்டவேறு ஒரு தாவாவானது இந்திய சர்க்கார், சென்னை சர்க்கார் மைசூர் சர்க்கார் இம்மூவர் மீதும் சேர்த்து போடப்பட்டது. தம்முடைய முன்னோர்களில் ஒருவர் மைசூர் ராஜ வம்சத்திற்குச் செய்த உதவியால்தான் மைசூர் ராஜாவானவர் ராஜ்யத்தை இழக்காமல் இருந்தார் என்றும் அக்காரணத்தினால் தமக்கு பதினைந்து லக்ஷ ரூபாய் இச்சர்க்கார்களிடமிருந்து கிடைக்க வேண்டுமென்றும் அத்தாவா. இவர் ஒரு லக்ஷ ரூபாய்க்கு வேறு ஒரு தாவாவும் போடயத்தனம் செய்து கொண்டிருந்தார். அதாவது பெண்களுக்குக் கல்யாணம் என்பது அவசியமில்லை என்றும், கட்டாயமாகக் கல்யாணம் செய்துகொண்டுதான் ஆகவேண்டுமென்று இருக்கும் பழக்கமானது நமது அரசியல் அமைப்புச்சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்றும், இக் கொள்கைகளுக்கு மாறாகப் பிரதிவாதியானவர் தம்முடைய பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவிட்டார் என்றும் அதனால் தமக்கு ஒரு

லக்ஷ ரூபாய் கிடைக்கவேண்டுமென்றும் ஒரு தாவா தயார்செய்துகொண்டிருந்தார்.

இவ்வித வீண் வழக்குகள் போடப்படுவதைத் தடுக்கவேதான் இச்சட்டம் இயற்றப்பட்டதென நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு ஸ்ரீமதி எம். ஏ. ஜானபியானவர் சென்னையில் எவ்வித வழக்குகளைத் தொடருவதற்கு முன்பும் ஹைகோர்ட்டாரின் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், மற்ற இடங்களில் ஜில்லா ஜட்ஜின் அனுமதியின்றி அவர் எவ்வழக்கும் தொடரக்கூடாதென்றும் உயர் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

## 'புரோக்கர்களும்' விற்பனை வரியும்.

[ஆதாரம்:— 1954 (2) மதராஸ் லா ஜர்னல் 228.]

சென்னை விற்பனைவரிச் சட்டப்படி விற்பனை வரி கொடுக்கவேண்டியவர் ஒரு "வியாபாரி" (Dealer). "வியாபாரி" என்பவர் சரக்குகளை வாங்கியோ விற்றோ தொழில் செய்பவர் என்று விற்பனைவரிச் சட்டத்தில் அர்த்தம் சொல்லப் பட்டிருக்கிறது. கமிஷன் ஏஜண்டுகளோ, தரகர்களோ (Brokers) வியாபாரிகளாவார்களா என்ற பிரச்னை பல வழக்குகளில் எழுந்திருக்கிறது. 1952 (1) மதராஸ் லா ஜர்னல் 494. என்ற 'புல் பெஞ்ச்' தீர்ப்பில் இப் பிரச்னை விளக்கப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப வழக்கில் ஒருவர் 'மலபார் டிரேடிங் கார்பொரேஷன், என்ற விலாசத்தில் பல காபி தேயிலை, ரப்பர் கம்பெனிகளுக்கு விற்பனை ஏஜண்டாகத் தொழில் நடத்திவந்தார். அதாவது சரக்கு வாங்குபவர்களை அந்தக் கம்பெனிக்கு அறிமுகப்படுத்தி அவரவர்களுக்குத் தேவையான சரக்கை அக்கம்பெனிகளிடமிருந்து நேரிடையாகவே அவரவர்களுக்கு விற்பனையாகும்படி செய்துவந்தார். தம்முடைய முயற்சி மூலம் ஏற்பட்ட விற்பனைகளுக்கு ரூ. 100 க்கு ரூ. 2—8—0 வீதம் கமிஷன் அடைந்து வந்தார். இவர் தாமே சரக்குகளை வாங்கவேண்டிய வேலையோ, தம்மிடம் சரக்கை வைத்துக்கொள்ள வேண்டிய வேலையோ, கிடையாது. இவர் தாம் அடைந்துவந்த கமிஷனுக்கு மட்டில்தான் கணக்கும் வைத்துவந்தார். இவர் விற்பனை வரி கொடுக்கவேண்டுமென்று வரி விதித்ததுடன் அவ்வரியைக் கட்டவில்லை என்று இவர்மீது விற்பனை வரி அதிகாரிகள் கிரிமினல் வழக்கும் தொடர்ந்து, அவர் தண்டிக்கப்பட்டார். இத் தண்டனையை ரத்துசெய்யவேண்டுமென்று அவர் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுச்செய்து கொண்டதின்பேரில் உயர் நீதிபதி அவர்கள் இவர் ஒரு "வியாபாரி" யே அல்ல என்று அபிப்பிராயப்பட்டு தண்டனையை ரத்துசெய்தனர். முன்பு குறிப்பிடப்பட்ட 1952-ம் வருடத்திய தீர்ப்பு பின்பற்றப்பட்டது.

## சென்னை கட்டடங்களின் ஜாகை—வாடகைச் கட்டுப்பாடுச் சட்டம். சர்க்கார் அளித்த விதி விலக்கு செல்லவில்லை.

1949-ம் வருடத்திய 25-வது சென்னைச் சட்டமாகிய கட்டடங்களின் ஜாகை-வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தின் (Madras Buildings Lease and Rent Control Act 1949) 13 வது செக்ஷனில் சர்க்காருக்கு ஒரு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது எந்தக் கட்டடங்களுக்கும் இச்சட்டமே கிடையாதென்றோ, அல்லது இச்சட்டத்தின் சில ஷரத்துக்கள் மட்டில் கிடையாதென்றோ விதி விலக்கு அளிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரத்தை உபயோகித்துச் சென்னை சர்க்கார் ஒரு குறிப்பிட்ட கட்டடத்திற்கு விதி விலக்கு அளித்தனர், எப்படி விதி விலக்கு என்றால், அச் சட்டம் சம்பந்தப்பட்டவரையில் ஜாகை-வாடகைக்கட்டுப்பாடுச் சட்டத்தின் செக்ஷன் 7 (2) என்ற ஷரத்தும் செக்ஷன் 9 என்ற ஷரத்தும், இவ்விரண்டு ஷரத்துக்கள் மட்டில் அக்கட்டடத்திற்குக் கிடையாதென விதி விலக்கு அளிக்கப்பட்டது. செக்ஷன் 7 (2) என்பது கட்டடக்காரர் சில காரணங்களைக்கொண்டு குடிக்கூலிக்காரரைக் கட்டடத்தை விட்டு அகற்ற ரெண்டு கண்ட்ரோலரிடம்மனுப்போடுவது பற்றி. ரெண்டு கண்ட்ரோலருடைய தீர்ப்பை நிறைவேற்றுவது பற்றியது செக்ஷன் 9 என்பது. இந்த இரண்டு ஷரத்துக்கள் மட்டில் அக் கட்டிடத்திற்குக் கிடையாதென்றால், குடிக்கூலிக்காரர் வாடகைக் கொடுக்காவிட்டாலும், வேறு சில காரணங்களிலிருந்தாலும் அவரை அகற்ற முடியாது என்று ஏற்படுகிறது. ஆனால் ஜாகை-வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தில் மற்ற ஷரத்துக்கள் எல்லாம் இக் கட்டடத்திற்கும் உண்டு. இச்சட்டத்தில் கண்டமுறைப்படிதான் ஒரு குடிக்கூலிக்காரரை அகற்றலாமே ஒழிய வேறு விதமாக அவரை அகற்றமுடியாதென்று அச்சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்து இக் கட்டடத்திற்கு உண்டு. இப்படி விதி விலக்கு அளிக்கப்பட்ட கட்டடத்

தின் சொந்தக்காரர் பொதுச்சட்டத்தின்படியும் குடிக்கூலிக்காரரை அகற்ற முடியாது; இச்சட்டப்படிக்கும் அவரை அகற்றமுடியாதென்ற நிலைமை ஏற்படுகிறது. இவ்விதம் சர்க்கார் விதி விலக்கு அளிப்பது செல்லாதென உயர் நீதிபதி ராஜகோபாலய்யங்கார் அவர்கள் ஒரு சமீபத் தீர்ப்பில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். விதி விலக்கு அளிக்கப்பட்ட ஷரத்துகள்போக பாக்கி இருக்கும் ஷரத்துக்கள் அரை குறையாகவும் இரண்டுங்கெட்டானாகவும் இருக்காவண்ணம் விதி விலக்குகள் அளிக்கவே சர்க்காருக்கு இச்சட்டம் அதிகாரம் கொடுக்கின்றதென்றும்; வேறு விதமாக விதி விலக்குகள் அளிப்பது செல்லாதெனவும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (சென்னை ஹைகோர்ட்—C. M. P. No. 3970 of 1951. C. R. P. No. 1693 of 1951.)

187734
600 003

## 'அரெஸ்டு' செய்யப்பட்டவர் கோர்ட் உத்யோகஸ்தரைப் பின் தொடர மறுத்தார்.

இவ்வழக்கில் ஒரு ருசிகரமான பிரச்னை ஏற்பட்டது. சிவில் கோர்ட்டு டிகிரி ஒன்றை நிறைவேற்ற, பிரதிவாதி மீது 'அரெஸ்ட் வாரண்டு' பிறப்பிக்கப்பட்டது. அரெஸ்டு வாரண்டை எடுத்துப்போன 'புரோசஸ் சர்வர்' பிரதிவாதியை அரெஸ்டு செய்துவிட்டார். சட்டப்படிக்கான அரெஸ்டு வாரண்டுக் கட்டளைக்கு அகப்படாமல் வேணுமென்று தடை செய்வதும் சரி, அரெஸ்டு செய்யப்பட்ட பிறகு தப்பி ஓடுவதும் சரி இரண்டும் இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின் செக்ஷன் 225 B என்ற ஷரத்தின்படி குற்றமாகும். பிரஸ்தாப வழக்கில் அரெஸ்டு செய்யப்பட்டவர் தாம் 'அரெஸ்டு' செய்யப்படுவதை ஆட்சேபிக்கவுமில்லை, தடை செய்யவுமில்லை. அரெஸ்டு செய்யப்பட்ட பிறகு தப்பி ஓடிவிட முயற்சி செய்யவுமில்லை. ஆனால் தம்மை அரெஸ்டு செய்த புரோசஸ் சர்வர் அவரைத் தம்முடன் வரும்படி கூப்பிட்டும் அவர் அப்படிச்செய்ய மறுத்துவிட்டார். அதாவது பிரோசஸ் சர்வருடன் அவர் வர மறுத்துவிட்டார். இப்படிச் செய்வதும் குற்றம்தான் என உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் 16—7—1954ல் அளித்த ஒரு தீர்ப்பு ஒன்றில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அரெஸ்டு செய்யப்பட்டவர் கோர்ட்டு அதிகாரியுடன் வரமாட்டேன் என்று சொன்னால் கோர்ட்டு அதிகாரியானவர், ஒன்று, அவரை விட்டு விட்டுப் போய்விடவேண்டும்; அல்லது பலாத்காரத்தை உபயோகித்து அவரை அழைத்துச்செல்ல வேண்டும்; அரெஸ்டு செய்யப்பட்டவரின் செய்கையானது புரோசஸ் சர்வரிடமிருந்து தாம் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வதேயாகுமென்றும் இதுவும் இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் 225 B-ஷரத்தின்படி குற்றம்தான் எனவும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

(Crl. Rev. Case No 1230 of 1953 Cr Rev. Pet. No. 1162 of 1953.)

## தஞ்சைச் சட்டம்—சொந்த நிலமும் டிரஸ்டி பாத்தியமுள்ள நிலமும் சேர்ந்து 3 வேலி புஞ்சைக்குமேல் இருந்தால், அவருக்குத் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் உண்டா?

[ஆதாரம்:—1854 (2) மதராஸ் லா ஜர்னல் 340.]

தஞ்சைச் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட ஷரத்துகள் எதவும் ஒரு கிராமத்தில் நன்சை ஒரு வேலிக்கு மேலும் புஞ்சையாக இருந்தால் மூன்று வேலிக்கு (20எக்கர்) மேலும் நிலம் இல்லாதவர்களுக்குப் பொருந்தாது. அந்த அளவுக்கு மேற்பட்டு ஒரே கிராமத்தில் நிலம் உள்ளவர்களுக்குத்தான் இச்சட்டம் உண்டு.

பிரஸ்தாப வழக்கில் ஒருவருக்கு 11 எகர் $31\frac{1}{2}$ செண்டு புஞ்சை நிலம் இருந்தது. இதைத் தவிர அவர் ஒரு தைக்காலுக்குப் டாம்பரை டிரஸ்டியாக இருந்தார். அந்த ஹோதாவில் அவரிடம் 10 எகர் 1 செண்டு புஞ்சை நிலம் இருந்தது. ஆக அவருடைய அனுபவத்தில் மொத்தம் 21 எகர் $32\frac{1}{2}$ செண்டு, அதாவது 3 வேலிக்குமேல் புஞ்சை நிலமிருந்தது.

இவருடைய நிலங்களை 1—12—1951 ல் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருந்த ஒரு குத்தகைதாரர் தமக்கு இச்சட்டப்படி ஐந்து வருட கெடுவுக்குக் குத்தகை பாத்தியம் இருப்பதாக சமரச அதிகாரியிடம் மனுக்கொடுத்தார். சமரச அதிகாரியானவர் நிலத்தின் சொந்தக்காரரிடம் அனுபவமுள்ள சொந்த நிலமும் தைக்கால் நிலமும் சேர்ந்து 3 வேலிக்கு மேல் இருப்பதால் இவருக்குத் தஞ்சைச்சட்டம் உண்டென்றும், அவரிடம் குத்தகை வைத்திருந்தவ

ருக்கு 5 வருட கெடுவரையில் குத்தகை பாத்தியம் நீடிக்குமென்றும் உத்தரவிட்டார். நிலக்காரர் இதன்பேரில் ரிவின்யூ கோர்ட்டுக்கு அப்பீல்செய்தார். ரிவின்யூ கோர்ட்டிலும் சமரச அதிகாரியின் உத்தரவே உறுதிசெய்யப்பட்டது.

நிலத்தின் சொந்தக்காரர் இவ்வுத்தரவு செல்லாதெனச் சென்னை ஹைகோர்ட்டுக்கு 'ரிட்,' மனுக்கொடுத்ததன்பேரில், இது சம்பந்தமான தஞ்சைச் சட்ட ஷரத்தை உயர் நீதிபதி கோவிந்தமேனன் அவர்கள் விளக்கம் செய்திருக்கின்றனர்.

அதாவது ஒருவரிடம் 'இருக்கும்' நிலங்களை, (Land held by a land owner) என்று தஞ்சைச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதானது அவருக்குச் சொந்த உரிமையுள்ள சொத்துக்களைத்தவிர அதே நபரிடம் வேறு ஹோதாவில் இருக்கும் நிலங்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். ஒருவரிடம் சொந்தநிலம் தவிர மைனர் கார்டியன் என்ற முறையிலோ, தர்மகர்த்தா அல்லது டிரஸ்டி என்ற முறையிலோ வேறு நிலங்கள் இருந்தாலும் அவைகளையும் சேர்த்துக் கணக்குச் செய்ய சட்டம் இடங்கொடுக்காதென சட்டவிளக்கம் செய்திருக்கின்றனர்.

பிரஸ்தாப வழக்கில் நிலத்தின் சொந்தக்காரருக்கு உரிமை உள்ள சொந்த நிலமானது 3 வேலி புஞ்சைக்குள் இருப்பதால் இவருடைய நிலங்களுக்குத் தஞ்சைச் சட்டம் பொருந்தாதென்றும், அவருடைய நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருந்தவருக்குத் தஞ்சைச் சட்டத்தில் கண்ட 5 வருட கெடுவுக்கு பாத்தியம் ஏற்படாதென்றும், உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு சமரச அதிகாரியின் உத்தரவையும் ரிவின்யூ கோர்ட்டின் உத்தரவையும் உயர் நீதிபதி அவர்கள் ரத்துசெய்தனர்.

## வழக்கில் வசூலாகும் தொகையில் தமக்குப் பாதி வீதம் கொடுக்க வேண்டுமென்று கட்சிக்காரருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு 'கேஸ்' நடத்திய வக்கீலின் நடத்தை தவறானது. வக்கீல் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டார். சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு

[ஆதாரம்;—1954 (2) மதராஸ் லா ஜர்னல் 206.]

பம்பாய் ஹைகோர்ட்டின் அட்வகேட் ஒருவருடைய தொழில் சம்பந்தமான நடத்தையானது சரியா என்ற பிரச்னையைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டார் இவ்வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். அப்பம்பாய் வக்கீலின் கட்சிக்காரர் ஒருவருக்கு ஒரு கம்பெனியாரிடமிருந்து ரூ. 9400 கிடைக்க வேண்டியதாக இருந்தது. கம்பெனியின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளச் செலவுக்கு ரூ. 200-ம் அது தவிர வக்கீல் பீசும் கொடுக்கவேண்டுமென்று வக்கீல் கேட்டார். கட்சிக்காரர் கையில் அவ்வளவு பணமில்லை. ஆகையால் அக்கட்சிக்காரர் வக்கீலுக்கு ஒரு கைலெட்டர் கொடுத்தார். அதாவது தாம் செலவுக்காக ரூ. 200 கொடுத்துவிடுவதாகவும், வசூலாகும் தொகையில் சரிபாதியை வக்கீல் தம்முடைய பீசுக்காக எடுத்துக் கொள்ளலாமென்றும் அதில் கட்சிக்காரர் ஒப்புக்கொண்டிருந்தார். இக்கடிதத்தை வாங்கிக் கொண்ட வக்கீல் உடனே கம்பெனியாருடன் கடிதப் போக்குவரத்து ஆரம்பித்து அவர்கள் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் தயார் செய்து விட்டார். ஆனால் அந்நடவடிக்கைகளைக் கோர்ட்டில் தாகல் செய்யுமுன் கம்பெனிக்காரர்கள் ரூ. 6400 கொடுத்து விடுவதாக ராஜி செய்து கொண்டனர். இத்தொகையை அடைந்த கட்சிக்காரர், வக்கீலுக்கு ரூ 800 மட்டில் கொடுத்தார். வக்கீல் தமக்குப் பாக்கி ரூ. 2200 சொச்சம் வரவேண்டுமென்று கட்சிக்காரரிடம் கேட்டார். அத்தொகையைக் கட்சிக்காரரிடமிருந்து வக்கீல் அடைந்தாரோ இல்லையோ என்ற விஷயம் தெரியவில்லை. அதற்குள் வக்கீல் இவ்விதம் கட்சிக்காரருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு வழக்கு நடத்திய விஷயமானது பம்பாய் ஹைகோர்ட்டுக்கு எட்டியது. ஹைகோர்ட்டார் இவ்விஷயத்தை விசாரணை செய்யும்படி 'பார்கவுன்சில்' என்ற வக்கீல்களின் சங்கத்தின் மூன்று அங்கத்தினர்கள் கொண்ட ஒரு டிரிபுனல் சபையாருக்கு அனுப்பினர். பார்கவுன்சில் சபையார் அவ் வக்கீல் இவ்விதம் கட்சிக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வழக்கு நடத்துவதானது வக்கீல் தொழில் முறைக்கு உகந்ததல்ல என்றும் இது தவறான நடத்தை என்றும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அவ்வபிப்பிராயத்தை பம்பாய் ஹைகோர்ட்டார் ஏற்றுக்கொண்டு, அவ் வக்கீலானவர் ஆறு மாதங்களுக்கு தம்முடைய தொழிலை நடத்தக்கூடாதென்று அவரை 'சஸ்பெண்டு' செய்தனர். அவ்வக்கீல் சுப்ரீம் கோர்ட்டிலும் வாதாடக்கூடிய அட்வகேட்டாகப் பதிவு செய்து கொண்டிருந்தபடியால் ஹைகோர்ட்டார்

தங்களுடைய தீர்ப்பின் நகல் ஒன்றை சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பினார்கள். அதன் பேரில் சுப்ரீம் கோர்ட்டார் இவ்விஷயம் சம்பந்தமான சட்டத்தைப் பரிசீலனை செய்து தீர்ப்பளித்தனர். சுப்ரீம் கோர்ட்டாருடைய அபிப்பிராயம் இது தான்: ஒருவருக்காக வேறு ஒருவர் வழக்குகளை நடத்தி அதன் மூலம் கிடைக்கும் ஆதாயத்தில் தாம் ஒரு பாகத்தை அடையவேண்டியதென்று இரண்டு தனிநபர்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அவ்வித ஒப்பந்தம் இந்தியச் சட்டப்படிச் செல்லுபடியானதே. ஆனால் ஒரு வழக்கில் வகாலத்து வாங்கிக் கட்சி நடத்தும் வக்கீலானவர், தம்முடைய கட்சிக்காரருடன் பீசுக்குப் பதிலாக அவ்வித ஒப்பந்தம் செய்து கொள்ளுவதானது அவருடைய கண்ணியமான தொழிலுக்கு அகௌரவம் ஏற்படுத்துவதாகும். அவ்விதம் அவர் செய்வது தொழில்முறையில் ஒரு தவறான நடத்தையாகும் என உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, பம்பாய் ஹைகோர்ட்டார் அவ்வக்கீலை சஸ்பெண்டு செய்த அதே காலத்திற்கு அவ்வக்கீல் சுப்ரீம் கோர்ட்டிலும் தம்முடைய வக்கீல் தொழிலை நடத்தக் கூடாதென அவரை 'சஸ்பெண்டு' செய்தனர். வக்கீல் தமக்கு எவ்வளவு அதிகமாக 'பீசு' பேசிக் கொண்டாலும் அது தவறல்ல. ஆனால் தாம் வகாலத்து வாங்கி நடத்தும் விவகாரத்திலிருந்து கட்சிக்காரருக்குக் கிடைக்கக்கூடிய ஆதாயத்தில் ஒருபங்கு தம்முடைய பீசுக்காகக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொள்ளுவது அவருடைய தொழில் சம்பந்தப்பட்டவரையில் ஒரு தவறான நடத்தையாகும்.


## TRADE MARK
## REGISTRATION CAUTION ADVERTISEMENT.

Trade Mark No. 141811.




This Trade Mark has been registered by the Government of India, the Registered Number being 141811. Anybody imitating this Trade Mark and infringing our rights will be liable for all damages and they are cautioned that legal steps will be taken against them.

**N. S. P. Kasivisvanathan Chettiar,**
**INDIA CLOTH STORES**
HAND LOOM CLOTH MANUFACTURERS
79, South Avanimoola Street, MADURAI.

## டிரேட் மார்க்
## ரிஜிஸ்டரேஷன் எச்சரிக்கை

மேலேகண்ட டிரேட்மார்க் இந்தியா கவர்ன்மென்டாரால் 141811 நம்பராக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. யாரேனும் இந்த டிரேட்மார்க்கை இமிடேஷன் செய்து எம்முடைய உரிமைகளை மீறினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இதன்மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

**(Sd) N. S. P. காசிவிஸ்வநாதன் செட்டியார்,**
**இந்தியா கிளாத் ஸ்டோர்ஸ்,**
79-தெற்காவணிமூலவீதி, மதுரை.

REGISTERED THROUGH
**ஐ. ஸீ. ஏஜன்ஸி,** நாயக்கர் புதுத் தெரு மதுரை.




# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories' Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

ஒரு குற்றத்திற்காகத் தண்டனை அடைந்தவர் அதேவிதமான குற்றத்தை தண்டனை அடைந்த
செக்ஷன் 94
இரண்டு வருடத்திற்குள் மறுபடியும் செய்தால், இதற்கு அதிக தண்டனை உண்டு. அதாவது 6 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 1000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## இன்ஸ்பெக்டரைத் தடுப்பது.

இச்சட்டப்படி தம் அதிகாரங்களைச் செலுத்தும் இன்ஸ்பெக்டர்களை வேணுமென்று அப்படிச் செய்யாமல் தடுப்பதும்; இன்ஸ்பெக்
செக்ஷன் 95
டர் கேட்கும்போது இச்சட்டப்படிக்கும் விதிகளின்படிக்கும்வைக்கப்பட்டிருக்கும் ரிஜிஸ்டர்களையும் தஸ்தவேஜுகளையும் அவரிடம் தாகல் செய்யாமலிருப்பதும்; எந்தத் தொழிலாளரையும் இன்ஸ்பெக்டர் முன் ஆஜராகாமல் தடுப்பதும் அவர் அத்தொழிலாளரைப் பரிட்சை செய்யாதபடி தொழிலாளரை மறைத்து வைப்பதும் குற்றங்களாகும்; இவ்விதக் குற்றங்களுக்கு 3 மாதம் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இச்சட்டத்தின் செக்ஷன் 91-ன் படி தொழிற்சாலையிலுள்ள எவ்வித சரக்கையும் மாதிரி எடுத்து ரசாயனப் பரிட்சை
செக்ஷன் 96
செய்யப்பட்டால், அப்பரிட்சையின் முடிவை எவரும், வழக்கு விசாரணைகளில் சொல்லப்படுவது தவிர எவ்வகையிலும் எவருக்கும் பிரசுரம் செய்வது ஒரு குற்றமாகும். இதற்கு 3 மாதம் வரை சிறை தண்டனை, அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## தொழிலாளர்களும் குற்றம் செய்பவர்களாவார்கள்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும் இச்சட்டப்படிக்கோ அல்லது விதிகள், உத்தரவுகளின் படிக்கோ,
செக்ஷன் 97
செய்யவேண்டிய கடமையை செய்யாதிருப்பது ஒரு குற்றமாகும். அவ்வித குற்றங்களுக்கு ரூபாய் 20 வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்விதம் ஒரு தொழிலாளர் தண்டிக்கப்பட்டால், அதே செய்கைக்கு தொழிற்சாலையின் ஆட்சியாளரோ, மானேஜரோ குற்றவாளிகளாக மாட்டார்கள்.

ஆனால் எந்தத் தொழிலாளரும் வேணுமென்று ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்களுடைய சௌகரியத்திற்காகவோ, பந்தோ
செக்ஷன் 111
பஸ்துக்காகவோ, தேக ஆரோக்கியத்திற்காகவோ வைக்கப்பட்டிருக்கும் சாதனங்களுக்கோ, சௌகரியங்களுக்கோ கெடுதி விளைவித்தாலும் சரி; அல்லது தமக்கோ வேறு எவருக்கோ ஆபத்து நேரிடும் விதம் எக்காரியத்தையும் காரணமின்றி செய்தாலும் சரி; தொழிலாளர்களின் பந்தோபஸ்துக்காகவோ, தேக ஆரோக்கியத்திற்காகவோ வைக்கப்பட்டிருக்கும் சாதனங்களை தம் அசட்டையால் உபயோகிக்காமல் விட்டு விட்டாலும் சரி; அத்தொழிலாளர் குற்றம் செய்பவராவார். இவ்வித குற்றங்களுக்கு தண்டனை அதிகம். 3 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூபாய் 100 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## ஒருவருடைய தகுதி சர்டிபிகேட்டை வேறு ஒருவர் உபயோகிப்பது

**செக்ஷன் 98**

இச்சட்டத்தின் செக்ஷன் 70ன் படி ஒரு தொழிலாளருக்கு டாக்டரால் கொடுக்கப்படும் தகுதி சர்டிபிகேட்டை வேறு ஒருவர் தமக்காக உபயோகிப்பது ஒரு குற்றமாகும்; ஒருவர் வாங்கிய சர்டிபிகேட்டை வேறு ஒருவருடைய உபயோகத்திற்காகக் கொடுப்பதும் குற்றமாகும். இதற்கு ஒருமாதம் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## குழந்தைகளின் பெற்றோர் அல்லது கார்டியன் குற்றவாளியாவார்

**செக்ஷன் 99**

ஒரு தொழிற்சாலையில் வேலை செய்த ஒரு 'குழந்தை' அதே நாளில் வேறு ஒரு தொழிற்சாலையிலும் வேலை செய்தால் அக்குழந்தையின் பெற்றோர், அல்லது கார்டியன், அல்லது அக்குழந்தையின் சம்பளத்தை உபயோகிப்பவர் இவர்கள் குற்றம் செய்பவர்களாவார்கள். இதற்கு ரூபாய் 50 வரை அபராதம் விதிக்கப்படலாம். ஆனல் இவர்களுடைய சம்மதமோ ஒக்குமத்தோ இல்லாமல் குழந்தை தாமாக அவ்விதம் வேலை செய்திருந்தால், அது குற்றமாகாது.

## கூட்டாளிகளும் சங்கங்களும் நடத்தும் தொழிற்சாலைகளில் ஆட்சியாளர் யார்?

**செக்ஷன் 100**

கூட்டாளிகளால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டவரை அவர்களில் ஒருவரை இச்சட்டத்திற்காக 'ஆட்சியாள'ராக குறிப்பிட்டு இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் மீது தான் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். பொது கம்பெனிகளில் டைரெக்டர்களில் ஒருவர்மீதும், சொந்த கம்பெனிகளில் பங்குதார் ஒருவர் மீதும் இச்சட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆனல் இவர்களும் ஒரு டைரெக்டர் அல்லது பங்குதாரை ஆட்சியாளனாகக் குறிப்பிட்டு அதை இன்ஸ்பெக்டருக்கு தெரிவித்திருந்தால் அவர்மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

## கட்டடங்களின் சொந்தக்காரர்களின் பொறுப்பு

**செக்ஷன் 93**

ஒரு கட்டடத்தின் சொந்தக்காரர் ஒருவராக இருந்து அதில் ஒவ்வொருபாகமும் தனித்தனித் தொழிற்சாலைகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு அந்த அந்தத் தொழிற்சாலைக்குத் தனித்தனி ஆட்சியாளர்கள் இருந்தாலும், கட்டடத்தின் சொந்தக்காரரையும் இச்சட்ட ஷரத்துக்களில் சில கட்டுப்படுத்தும். அவையாவன:— (1) தேகஆரோக்கியம் சம்பந்தமான 3-ஆவது அத்தியாயம். (2) பந்தோபஸ்து சம்பந்தமான 4ஆவது அத்தியாயம், யந்திரங்கள் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் தவிர. (3) சௌகரியம் சம்பந்தப்பட்ட 5 ஆவது அத்தியாயம் — இவைகளில் அடங்கிய இச்சட்ட ஷரத்துக்களும் அதுசம்பந்தமான விதிகளும் சட்டத்தின் சொந்தக்காரர்களையும் கட்டுப்படுத்தும். ஆனல் பல தொழிற்சாலைகளின் தொழிலாளர்களும் பொதுவாக உபயோகிக்கக் கூடிய இடங்களைப் பற்றித்தான் சட்டத்தின் சொந்தக்காரர் பொறுப்பாளி ஆவார். மேலும் தம்முடைய தனிப் பொறுப்பில் இருக்கும் லிப்ட்கள், தீவிபத்தில் தப்ப வழிகள் இவை சம்பந்தப்பட்டவரையில் தான் கட்டடத்தின் சொந்தக்காரர் பொறுப்பாளி ஆவார். ஒரு தொழிற்சாலையின் ஆட்சியாளரின் பிரத்தியேக அனுபவத்திலிருக்கும் இடங்களுக்கும் சட்டத்தின் சொந்தக்காரர் பொறுப்பாளி ஆகமாட்டார். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட இச்சட்ட ஷரத்துக்களையும் விதிகளையும் உத்தரவுகளையும் தொழிற்சாலைகள் நடத்தப்படும் கட்டடங்களின் சொந்தக்காரர் மீறினலும் குற்றம் செய்பவராவார். 3 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஒரு கட்டடம் ஒரு தனி நபருக்குச் சொந்தமாக இல்லாமல் பல கூட்டாளிகளுக்கோ கம்பெனி அல்லது சங்கங்களுக்கோ சொந்தமாக இருந்தாலும் இவர்கள் சம்பந்தமாக மேலே சொல்லப்பட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படலாம்.

## தொழிற்சாலை ஆட்சியாளர்களும் மானேஜர்களும் தப்பிக்கொள்ள வேண்டுமானல்

**செக்ஷன் 101**

இச்சட்டப்படி தண்டனை விதிக்கக்கூடிய ஒரு குற்றத்திற்காக ஒரு தொழிற்சாலையின் ஆட்சியாளர் மீதோ மானேஜர் மீதோ வழக்கு தொடரப்பட்டால், அவர்கள் தப்பிக்கொள்ள ஒரு வழி இருக்கிறது. அதாவது தாங்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் தங்களுக்குத் தெரியாமலும், தங்களுடைய சம்மதமோ ஒக்குமாத்தோ இல்லாமலும் வேறு ஒருவரால் இக்குற்றம் செய்யப்பட்டதென்று அவர்கள் வேறு ஒருவர்மீது புகார் செய்து அதை ருசுப்பித்தால் தப்பிக்கொள்ளலாம். அதற்காக அவர்கள்

ஒரு 'கம்ப்ளெயின்ட்' கொடுக்கவேண்டும். அவ் வழக்கில் அந்த வேறுநபர் தண்டிக்கப்பட்டால், தொழிற்சாலையின் ஆட்சியாளர் அல்லது மானேஜர் மீது போடப்பட்ட வழக்கு தள்ளப் படும்.

## தண்டனை தவிர வேறு உத்தரவு களும் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு

செக்ஷன் 102

இச்சட்டத்தின்படி தண்டிக்கப்படும் தொழிற் சாலை ஆட்சியாளருக்கோ மானேஜருக்கோ அக் குற்றம் சம்பந்தமான எவ்வித காரியங்களையும் செய்யும்படி உத்தரவிடவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இதற்காக ஒரு கெடுவும் குறிப்பிடப்படும். அக் கெடுவை நீடிக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அக்கெடுவுக்குள் கோர்ட்டால் உத்தரவு செய்யப்பட்ட காரியத்தை அத்தொழிற்சாலை ஆட்சியாளரோ, மானேஜரோ செய்யவில்லை என்று மறுபடியும் அவர்கள் மீது வழக்கு தொடர முடியாது. ஆனால் அக்கெடுவுக்குள் அக்காரியத்தை செய்யாதிருந்தால் அது குற்றமாகும். இதற்கு கிரிமினல் வழக்கு தொடரப் படலாம். இவ்வித குற்றங் களுக்கு, உத்தரவில் கண்ட செய்கை எவ்வளவு நாட்கள் (கெடுவுக்குப்பின்) செய்யப்படாமலிருந்ததோ, அவ்வளவு நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 100 வரை அபராதம், அல்லது 6 மாதம் வரை சிறை தண்டனை, அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## தொழிற்சாலைக்குள்ளே இருப்பவர் கள் தொழிலாளர்களாவார்கள்.

செக்ஷன் 103

ஒரு தொழிற்சாலையில் வேலை நடந்து கொண் டிருக்கும் நேரங்களில், அதாவது உணவு அருந்த அல்லது இளைப்பாறுவதற்கான இடைவேளை தவிர மற்ற வேலை நேரங்களில் தொழிற்சாலைக்குள் இருப்பவர்கள் யாவரும் அத் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டிருப்பவர்களாகபாவிக்கப்படலாம். ஆனால் இது அல்ல என்றும் ருசுப்பிக்கலாம்.

## வயது என்ன என்று யார் ருசுப்பிக்க வேண்டும்.

செக்ஷன் 104

ஒரு குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட தொழி லாளர் செய்ததால் அச் செய்கை குற்றமாகி, அதற்காக தொழிற்சாலைக்காரர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, கோர்ட்டுக்கும் அச் செய்கையைச் செய்தவர் குறிப்பிட்ட வயதுக்குட் பட்டவர் தான் என்று முதலெடுப்பில் தோன்றினால், அத் தொழிலாளருக்கு அதிக வயதாகி விட்டதென்றும் ருசுப்பிக்கவேண்டியவர் குற்றம் சாட்டப்பட்டவர்தான்.

சர்டிபையிங் சர்ஜனால் ஒரு தொழிலாளரை பரிட்சை செய்யப்பட்டு அவர் எவ்வளவு வயதுக் குட்பட்டவர் என்று அவர் கொடுக்கும் சர்டிபிகேட்டானது ஒரு ருசுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

## யார் வழக்கு தொடருவது? யார் விசாரிப்பது?

செக்ஷன் 105

இச்சட்டப்படி எடுத்துக் கொள்ளப்படும் கிரி மினல் வழக்குகளை தொழிற்சாலை இன்ஸ்பெக் டர் தான் போடவேண்டும்; அல்லது முன்கூட்டியே அவரிடம் எழுத்துமூலம் அனுமதி பெற்று வேறு ஒருவர் போடவேண்டும். மற்ற எவரும் கிரிமினல் வழக்குத் தொடர முடியாது. மேலும் இச்சட்ட வழக்குகளை ஒரு பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டோ, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டோ தான் விசாரிக்கலாம்.

## கிரிமினல் வழக்குத் தொடர காலாவதி

செக்ஷன் 106

ஒரு குற்றம் ஏற்பட்டதாக தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்கு என்று தெரியவருகிறதோ அதிலிருந்து 3 மாதங்களுக்குள் தான் அதைப்பற்றி கிரிமினல் வழக்குத் தொடரமுடியும். ஆனால் இன்ஸ்பெக்டரால் எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட ஒரு உத்தரவை மீறியதால் ஏற்படும் குற்றங்களுக்கு, குற்றம் ஏற்பட்டதிலிருந்து 6 மாதங்களுக்குள் வழக்கு தொடரலாம்.

(தொடரும்)



# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## பஞ்சாயத்தில் மோட்டார் லைசென்சு

95. கேள்வி: (ஆறுமுகம் செட்டி—மன்னைச்சநல்லூர்) பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள் ஒரு மோட்டார் ஏற்கனவே அனுமதிக்கப் பெற்று லைசென்ஸ் பெற்றுள்ள மின்சார சக்தியினால் இறங்கிக் கொண்டு இருக்கும் ஒரு தொழிற்சாலையில் மேற்கொண்டு ஒரு ஆயில் இன்ஜின் புதிதாக அமைத்தால், புதிதாக அமைக்கும் இன்ஜினுக்காக ஸ்தாபிக்க கட்டணம் தனியாகவும் லைசென்சு பீசு தனியாகவும் செலுத்த வேண்டுமா?

ஒவ்வொரு வருஷமும் வாங்கவேண்டிய லைசென்சுக்கு ஆயில் இன்ஜின் எலக்ட்ரிக் மோட்டார் இவைகளின் குதிரை வேகத்தை அனுசரித்து தனித்தனியாக லைசென்சு கட்டணம் செலுத்தவேண்டுமா, அல்லது ஆயில் இன்ஜின் எலக்ட்ரிக் மோட்டார் இவைகளின் குதிரை வேகங்களை ஒன்றாக சேர்த்து மொத்தமாக ஒரே லைசென்சு வாங்கிக் கொண்டால் போதுமா?

பதில்: பஞ்சாயத்துச் சட்டவிதிகளின்படி எலக்ட்ரிக் மோட்டார்களை ஸ்தாபிதம் செய்யத் (Installation) தனிக் கட்டணமும் ஆயில் இன்ஜின்களை ஸ்தாபிதம் செய்யத் தனிக் கட்டணமும் கட்டவேண்டும். அதைப்போலவே எலக்ட்ரிக் மோட்டார்களுக்குத் தனி லைசென்சும் ஆயில் இன்ஜின்களுக்கு தனி லைசென்சும் வாங்கிக்கொண்டு வருடா வருடம் தனித் தனியாக புதுப்பித்துக் கொள்ளவேண்டும். தனித் தனிக் கட்டணங்கள்தான் கட்டிவரவேண்டும். (இது சம்பந்தமான பஞ்சாயத்துச் சட்டவிதிகள் 8—4—1952 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I A ரூல் சப்ளிமெண்ட் அறிக்கை 13-ல் இருக்கின்றன.) ஆனால் எலெக்ட்ரிக் விசை அடிக்கடி குறைவு ஏற்படும் நிலைமையை சமாளிக்க ஆயில் எஞ்ஜின்களைத் தாற்காலிகமாக வைத்துக்கொள்ள பஞ்சாயத்துக்கள் பர்மிட் கொடுக்கலாம். இதற்காக ஒரு தனி சென்னைச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. 1-9-1954-ல் அமுலுக்கு வந்த 1954-ஆம் வருடத்திய 23-வது சென்னைச்சட்டம்.

## விவாகரத்தும்—ஜீவனும்சமும் இந்துச் சட்டமும் இஸ்லாமியச் சட்டமும்

96. கேள்வி: (குப்பண்ண கவுண்டர்—உடையார்பாளையம்.) ஒரு முஸ்லீம் தான் 'நிக்கா' செய்துக்கொண்ட மனைவியை விட்டு விடுவதானால் ('தலாக்' கொடுப்பதானால்) 'மஹர்' மட்டும் கொடுத்து விட்டால் போதுமா? ஜீவனும்சம் கொடுக்கவேண்டுமா? இதே போல இந்து மதத்தைச் சேர்ந்தவர் தான் மனம்

செய்து கொண்ட மனைவியை விட்டு விடுவதானால் என்ன செய்யவேண்டும்?

பதில்: இஸ்லாமியச் சட்டப்படி ஒருவர் திருமணம் செய்து கொண்ட மனைவியை ‘தலாக்’ கொடுத்து விவாக ரத்து செய்து விட்டால், அவளுடைய ‘மஹர்’ தொகையைக் கணவன் கொடுத்து விடவேண்டியதுடன், அவளுடைய ‘இத்தா’ காலத்தில் அவளைப் போஷித்து வர வேண்டிய கடமையும் கணவனுக்கு உண்டு. ‘இத்தா’ காலம் என்பது விவாகரத்துக்குப் பிறகு உள்ள மூன்று மாதங்கள். மனைவி அப்பொழுது கர்ப்பமாக இருந்தால், குழந்தை பிறக்கும் வரை அவளுக்கு ‘இத்தா’ காலம் எனப்படும். மாதவிடாய் உள்ள ஸ்திரீகளுக்கு ‘இத்தா’ என்பது மூன்று மாதவிடாய்கள் ஏற்படும் காலத்தைக் குறிக்கும். (முல்லா-இஸ்லாமியச் சட்டம் அத்தியாயம் 14 பார்க்கவும்.) விவாக ரத்து அல்லது ‘தலாக்’ கொடுக்காமல், முஸ்லீம் ஒருவர் மனைவியை ‘விட்டு விட்டால்’— அவளைப் போஷித்து வர வேண்டிய கடமை கணவனை விட்டுப் போய் விடாதென்று பொதுவாகச் சொல்லலாம். அவ்விதம் ‘விட்டு விடப்பட்ட’ மனைவி கணவன்மீது ஜீவனாம்சம் வாங்கிவர இஸ்லாமியச் சட்டம் இடம் கொடுக்கும். இந்துக்கள் சம்பந்தப்பட்டவரையில், சென்னைப் பலதாரத் தடை—விவாகரத்துச் சட்டப்படி விவாக ரத்து செய்யக் கோர்ட்டுக்குத்தான் அதிகாரம். அவ்வித விவாக ரத்து செய்யும்போது, சில சந்தர்ப்பங்களில் விவாக ரத்துக்குட்பட்ட ஸ்திரீ வேறு ஒரு கணவனை மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அவளுக்கு முதல் கணவன் ஜீவனாம்சம் கொடுத்து வரவேண்டுமென்று உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (சென்னை பலதாரத் தடை — விவாக ரத்துச் சட்டம் – செக்ஷன் 5 (8). விவாகரத்து செய்து கொள்ளாமல் ஒரு இந்துவானவர் மனைவியை ‘விட்டு விட்டாலும்’ மனைவியைப் போஷித்து வரவேண்டிய கடமை இந்துக் கணவனை விட்டு விடாதென்று பொதுவாகச் சொல்லலாம். அப்படி விடப்பட்ட மனைவியானவள் கணவன் மீது ஜீவனாம்சம் வாங்கி வர இந்துச் சட்டம் அனுமதிக்கின்றது.

## ஒரு பஞ்சாயத்தின் ‘மெஜாரடி’ மெம்பர்கள் ஒக்கு மத்தாக இருந்து கிராமத்தின் சில பகுதிகளைக் கவனிக்காமல் விட்டு விட்டால்?

97. கேள்வி: (T. A. சப்பராயன்-திருச்செங்கோடு.) பத்து மெம்பர்கள் உள்ள பஞ்சாயத்தில், தலைவர், ஆறு அல்லது ஏழு மெம்பர்களுடன் சேர்ந்துகொண்டு, பாக்கியுள்ள மெம்பர்களின் வார்டுகளில் எவ்வித வேலையும் ரோடு ரிப்பேர் வேலைகள் கூட செய்வதில்லை. அங்கே ஏதாவது வேலைகள் செய்ய வேண்டுமென்று தீர்மானங்கள் கொண்டு வந்தாலும், தோற்கடிக்கப்படுகின்றன. எக்சிகூடிவ் ஆபீசரும் தலைவர் பக்கமே சேர்ந்து வேலை செய்கிறார். மேல் ஆபீசர்களுக்கு எழுதி அவசியமான வேலைகளைச் செய்ய முடியுமா? எப்படி? வேலை செய்ய முடியாமலிருக்கும் வார்டுகளிலுள்ள ஜனங்களே எழுத முடியுமா? வரி கொடுக்காமல் இயக்கம் நடத்தலாமா?

பதில்: ஜனநாயக ஆட்சிமுறை என்பது பெரும்பான்மையின் (மெஜாரடி) ஆட்சிதான். பெரும்பான்மையாக இருப்பவர்கள் ஒன்று சேர்ந்து சிறு பான்மையாக இருப்பவர்களின் நலனைக் கவனிக்காமல் விட்டு விட இடமிருக்கிறது. இருந்தாலும், பஞ்சாயத்துச் சட்டத்தில் சில ஷரத்துக்கள் இருக்கின்றன. உதாரணமாக பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 50 என்ற ஷரத்தின்படி பஞ்சாயத்து எல்லைக்குள்ளிருக்கும் ரஸ்தாக்களைப் பழுதில்லாமல் வைத்திருப்பது, பொது ரஸ்தாக்களில் விளக்குப் போடுவது தெருக்களைச் சுத்தம் செய்து குப்பை கூளங்களை அகற்றுவது போன்ற சில காரியங்களைப் பண வசதிகளை அனுசரித்துக் கவனிக்கவேண்டியது பஞ்சாயத்தின் முதல் கடமையாகும். இக்கடமைகளை ஒரு பஞ்சாயத்தோ, அதன் தலைவரோ, நிர்வாக அதிகாரியோ செய்யத் தவறி விட்டால் இன்ஸ்பெக்டர் அல்லது ஜில்லா பஞ்சாயத்து ஆபீசரோ வேறு ஒருவரைக் கொண்டு இக்கடமைகளைச் செய்யும்படி உத்தரவிட்டு, அதன் செலவுகளை பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கும்படி உத்தரவிடலாம். (பஞ்சாயத்துச் சட்டம்-செக்ஷன் 46 (2)) தவிர வேண்டுமென்ற கடமைகளைச் செய்யத் தவறும் பஞ்சாயத்துக்களையே கலைத்து விடவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. (செக்ஷன் 48) கடமை செய்யத் தவறிய தலைவர் அல்லது உபத் தலைவர்களைப் பதவியை விட்டு நீக்கவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. மெஜாரடி பலத்தால் ஒரு பஞ்சாயத்தானது அக்கிராமத்தின் ஒரு பகுதியை மட்டில் வேண்டுமென்று கவனிக்காமல் இருப்பது, பஞ்சாயத்துச் சட்டப்படி கடமை தவறுவதாகும். இவ்விஷயத்தைப் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி சிறு பான்மை அங்கத்தினர்களோ, பொது ஜனங்களோ ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கோ, இன்ஸ்பெக்டருக்கோ, சர்க்காருக்கோ மனுப்போடலாம். வரி கொடுக்காமல் இருப்பதால் பயனில்லை. வரி எப்படியும் வசூல் செய்யப்படும். வரி கொடுப்பதற்கும் பஞ்சாயத்து மெஜாரடியாரின் நடத்தைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

98. கேள்வி: (A. M. வேலுசாமி கவுண்டர்—ஒடையகுளம்) ஒரு இந்துவுக்கு தாயைப் பெற்ற பாட்டன் சொத்தில் 1942-ல் பாத்தியம் ஏற்பட்டு 1950 வரையிலும் சொத்தை ஷியார் அனுபவித்து வந்து 1950-ல் தனது மைனர் மகன் பேருக்கு மைனரின் தாயாரைக்கார்டியனாக ஏற்படுத்தி ஒரு ரிஜிஸ்டர் செட்டில்மெண்டு பத்திரம் மைனர் மேஜரானவுடன் சொத்தை சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்துக் கொள்ள வேண்டியதென்று எழுதி வைத்து விட்டார். அவருக்கு ஷி பூமியைத் தவிர யாதொன்றும் கிடையாது இப்போது அவர் ஜீவனத்திற்கு கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் அவர் ஷி பத்திரத்தை ரத்து செய்யவோ வேறே மாற்றி எழுதவோ அவருக்கு சட்டப்படி அதிகாரம் உண்டா?

பதில்: சட்டப்படி ஏற்பட்டிருக்கும் செட்டில்மெண்டை ரத்து செய்யவோ மாற்றவோ அதை எழுதி வைத்தவருக்கு அதிகாரம் இல்லை என்று பொதுவாகச் சொல்லலாம்.

## பம்பாயில் கொள்முதல் செய்யும் சென்னை வியாபாரி பம்பாய் சர்க்காருக்கு விற்பனை வரி கொடுக்க வேண்டுமா?

99. கேள்வி: (அங்கப்பன்--ஈரோடு) சென்னை மாகாண வியாபாரி ஒருவர், பம்பாய் மாகாணத்தில் ஒரு சரக்கு கொள்முதல் செய்கிறார். ஷி சரக்குக்குச் சென்னை மாகாண வியாபாரி, பம்பாய் மாகாணத்திற்கு விற்பனை வரி செலுத்த வேண்டுமா?

பதில்: பம்பாய் ராஜ்ய எல்லைக்குள் சரக்கு விற்றவரிடமிருந்து பம்பாய் மாகாண சர்க்கார் விற்பனை வரி வசூல் செய்து கொள்வார்கள். ஆனால் அப்பம்பாய் வியாபாரியானவர் தம்மிடம் சரக்கு வாங்கும் சென்னை வியாபாரியிடமிருந்து சரக்கு விலையுடன் விற்பனை வரியையும் சேர்த்து வசூல் செய்து விடுவார். சரக்கு விற்றவர் கொடுக்க வேண்டிய அவ்வரியைச் சென்னை வியாபாரி நேரிடையாக பம்பாய் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியவரல்ல. அதே பம்பாய் வியாபாரியானவர் சரக்கை ரயில் மூலமாகவோ வேறு விதமாகவோ சென்னை ராஜ்யத்திற்கு அனுப்பி சென்னை ராஜ்யத்தில் 'டிலிவரி' கொடுத்தாலும் விற்பனை வரி கொடுக்க வேண்டியவர் பம்பாய் வியாபாரியே. ஆனால் அச்சந்தர்பத்தில் அவர் விற்பனை வரி கொடுக்க வேண்டியது சென்னை ராஜ்ய சர்க்காருக்கே ஒழிய பம்பாய் ராஜ்யத்திற்கு அல்ல.

## பாட்டன் சொத்தில் பேரனுக்கு உரிமை உண்டா--கிரஸ்தவர்களுக்கு

100. கேள்வி: (M. சேசுஆரோக்கியம்—அம்மாபட்டி) கிரஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவரிடம் இருக்கும் சொத்துக்கள் அவரால் சம்பாதிக்கப் பட்டவையல்ல. பூராவும் அவருடைய தகப்பனால் சம்பாதிக்கப்பட்டவை அச் சொத்துக்களை அவர் இஷ்டப்படி யாருக்கும் எழுதிக் கொடுத்து விடலாமா? அப்படிக் கொடுத்தால் அது செல்லுமா? அவருடைய மகன்களுக்கு அச் சொத்தில் உரிமை கிடையாதா? பாட்டன் சம்பாதித்த சொத்தில் பேரனுக்கு உரிமை உண்டு என்கிறார்களே; கிரஸ்தவச் சட்டப்படி பெண்களுக்கும் பாகம் உண்டா?

பதில்: சொத்தின் சொந்தக்காரரான அக்கிரஸ்தவர் அச் சொத்துக்களை அவர் இஷ்டப்படி யாருக்கும் எழுதிக் கொடுத்து விடலாம். அச் சொத்தானது அவருடைய சுய சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, அவருடைய தகப்பனால் சம்பாதிக்கப் பட்ட சொத்தாக இருந்தாலும் சரி இரண்டும் ஒன்றுதான். அச் சொத்தில் அவரைத் தவிர வேறு ஒருவருக்கும் அவருள்ள வரையில் உரிமை ஏற்படாது. பாட்டன் சம்பாதித்த சொத்தில் பேரனுக்குப் பாத்தியமுண்டு என்பது இந்துச்சட்டத்தில் தான். இந்துத் தகப்பனிடமிருக்கும் சொத்தானது அத்தகப்பனுடைய சுய சம்பாத்திய சொத்துக்களாக இருந்தால் அதை அத் தகப்பன் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் கொடுத்து விடலாம். அவருள்ள வரையில் அவருடைய மகன்களுக்கு அச் சொத்தில் உரிமை ஏற்படாது. இதில் இந்துக்களுக்கும் கிரஸ்தவர்களுக்கும் சட்டம் வித்யாசமாக இல்லை. ஆனால் இந்துத் தகப்பனிடம் இருக்கும் சொத்தானது பாட்டனால் சம்பாதிக்கப் பட்ட சொத்தாக இருந்தால் அச் சொத்தில் தகப்பனுக்கும் மகன்களுக்கும் சம உரிமை உண்டு. இதை வேறு விதமாகவும் சொல்லலாம். இந்து ஒருவர் இறக்கும் போது அவருக்கு மகனும் மகனுடைய மகன்களும் இருந்தால் அவருடைய சொத்துக்களை அவருடைய மகனும் பேரன்களும் சேர்ந்து அடைவார்கள். மகன் அச் சொத்தை அடைந்த பிறகு அவருக்குப் பிறக்கும் ஆண் மக்களுக்கும் பிறக்கும் போதே அச் சொத்தில் பாத்தியம் ஏற்பட்டு விடுகிறது. இது தான் இந்துச் சட்டத்திற்கும் மற்ற சட்டங்களுக்கும் உள்ள வித்தியாசம். கிரஸ்தவர் இறந்தால் அவருடைய சொத்துக்களில் ஆண்மக்களைப் போலவே பெண் மக்களுக்கும் வார்சு பாத்தியமுண்டு.

சென்ற இதழ் தொடர்ச்சி

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

**K. ஸ்ரீநிவாஸன், M. A.**

(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

[1932-ம் வருடத்தியக் கூட்டுறவுச் சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் "வக்கீல்" 1954 மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகிறது.]

### பிரதிவாதியின் சொத்துக்களை சங்கம் தீர்ப்புக்குமுன் ஜப்தி செய்வதுபற்றி.

வாதி சங்கம், அவசியமானால் பிரதிவாதியின் சொத்துக்களை தீர்ப்புக்குமுன் ஜப்தி செய்து விடும்படி ரிஜிஸ்திராரிடம் கோரிக்கொள்ளலாம். ஆனால், வாதி சங்கம் ரிஜிஸ்திராரிடம் பிரதிவாதி சொத்தைப் பராதீனம் செய்ய அல்லது அப்புறப்படுத்த உத்தேசிக்கிறார் என்றும், அவர் அப்படிச் செய்துவிட்டால் பின்பு பாக்கியை வசூலிப்பது கஷ்டமாய்விடும் என்றும் நம்பிக்கைப் படுத்துவது அவசியம்.

### ஆர்பிட்ரேஷன் தாவாக்களை விசாரித்து தீர்ப்புச் செய்யும் முறை.

இது ரூல் 15 & 16-ல் விவரிக்கப்பட்டுள்ளது. அனுப்பப்பட்ட தாவா சரியாகத் தயாரிக்கப் பட்டு, உரிய சட்டணத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறதா என்பதையும் தாவா காலாவதியாக வில்லை என்பதையும் அறிந்துகொண்டு பின்பு அதை ரிஜிஸ்திரார் தாமாக விசாரிப்பார்; அல்லது ஆர்பிட்ரேடரிடம் விசாரணைக்கு அனுப்பிவைப்பார்.

விசாரணை செய்யும் அதிகாரி விசாரணை தேதியைக் குறிப்பிட்டு வாதி பிரதிவாதிகளுக்கு சம்மன் பிறப்பிப்பார். சாதாரணமாக வாதி சங்கம் சம்மனை சர்வு செய்ய ஆர்ட்பிட்ரேடருக்கு ஒத்தாசை செய்யும். விசாரணை, வாதி சங்க ஆபிசிலேயே நடைபெறும்.

சம்மன் பார்ட்டிக்கு நேரில்கொடுக்கப் படலாம்; அல்லது அவர் வீட்டில் உள்ள வயது வந்த உறவினரிடம் கொடுக்கப்படலாம். இவை சாத்தியமில்லாத சந்தர்ப்பத்தில் சம்மன் ரிஜிஸ்தர் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படலாம். பார்ட்டியின் குடியிருப்பு விலாசம் தெரியாத சந்தர்ப்பத்தில் சம்மன் அவரது கடைசி வாசஸ்தலத்தில் ஒட்டி சர்வ் (Serve) செய்யப்படலாம்.

ஆர்பிட்ரேடர், பத்திரம் கணக்குகளைப் பார்வையிட்டும், வாதி பிரதிவாதிகளின் வாக்கு மூலங்களைக் கேட்டுக்கொண்டும் பின்பு நியாயம் போல் தீர்ப்பு செய்வார். வாக்குமூலங்களும், தீர்ப்பும் எழுதப்பட்டிருக்கவேண்டும். வாதி வரத்தவறினால் தாவா தள்ளப்படலாம், பிரதிவாதி தகுந்த காரணம் காட்டி வாய்தா கேட்காமலும் வராமலும் இருந்து விட்டால் ஆர்பிட்ரேடர் எக்ஸ்பார்ட்டி (Ex-party) யாக தீர்ப்பு செய்துவிடுவார். அவசியமான சந்தர்ப்பத்தில் ஆர்பிட்ரேடர், விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைத்துக் கொள்ளலாம்.

ஆர்பிட்ரேடரின் கோர்ட்டில் வக்கீல் ஆஜராக முடியாது. ஆர்பிட்ரேடரின் தீர்ப்பை வாதி செக்ஷன் 57 A படி ரிஜிஸ்திரார் மூலம் நிறைவேற்றலாம்; அல்லது சிவில் கோர்ட் மூலம் நிறைவேற்றலாம்.

### காலாவதி. சங்க விவகாரங்களுக்குக் காலாவதி.

வெண்ணிலைக் கடன் பண தாவாக்களுக்கு சிவில் கோர்ட்டில் போலவே காலாவதி (Limitation) மூன்று வருடம். உள் வாய்தா தனி அடமானக்கடன் பத்திரங்களுக்குக் காலாவதி கெடு 12 வருஷம். பத்திரத்தில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு வாவும் காலாவதி கெடுவை முதல் நிபந்தனைப்படி நீடிக்கும். கமிட்டி உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தியால் வரவேண்டிய பாக்கிக்காக தாவா செய்யப்பட்டால் அது, தொகை சேரவேண்டி ஏற்பட்ட தேதி முதல் இரண்டு வருஷங்களுக்குள் செய்யப்பட வேண்டும். தேர்தல் (எலெக்ஷன்) நிர்வாகம் சம்பந்தமான தாவாக்கள், தாவா விஷயம் ஏற்பட்ட இரண்டு மாதங்களுக்குள் செய்யப்பட வேண்டும் (ரூல் XV-1a.) காலாவதி கெடுவு கழித்து செய்யப்படும் தாவாக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

### கூட்டுறவுச் சட்டத்தை அனுசரிக்கத் தவறுவதால் ஏற்படும் குற்றங்கள்.

1932-வது வருஷ கூட்டுறவுச் சட்டமூலம் பல காரியங்கள் குற்றமாக்கப்பட்டுள்ளன அவை

1. சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தரிடம் பொய்யான தகவல் அல்லது வாக்குமூலம் கொடுப்பது, அல்லது ரூல் 7-படி அனுப்பவேண்டிய அறிக்கையில் தவறான தகவல்களைக் கொடுப்பது (செக்ஷன் 52a)

2. கூட்டுறவுச் சட்டப்படி பிறப்பிக்கப்பட்ட சம்மனை நிராகரிப்பது; அல்லது பெற்றுக் கொண்டபின் வேண்டுமென்றே வராமலிருந்து விடுவது (செக்ஷன் 52b)

3. செக்ஷன் 21-படி சங்கம் முன்பாத்தியம் கொண்டாடும் சொத்தை, மெம்பர் தனது பாக்கியைச் சட்டுமுன்பு வேண்டுமென்று விற்று விடுவது. (செக்ஷன் 53)

4. சர்க்கார் முன் அனுமதியின்றி "கோ-ஆபரேடிவ்" என்ற பெயரை கூட்டுறவுச் சட்டப்படி பதிவு செய்யப்படாத ஸ்தாபனம் உபயோகிப்பது. (செக்ஷன் 54)

5. செக்ஷன் 57-A & ரூல் XXII-படி நிறைவேற்றப்படும். யாதொரு சட்டரீதியான கட்டளைப்படி நடக்க மறுத்தல், அல்லது நிறைவேற்றுதலைத் தடுத்தல்.

இவை கூட்டுறவுச் சட்டப்படி குற்றங்களாகும்.

## கூட்டுறவுச் சட்டப்படி ஏற்படும் குற்றங்களைப் பற்றிய விசாரணையும் தண்டனையும்.

கூட்டுறவுச் சட்டப்படி ஏர்படும் குற்றங்களுக்காக கூட்டுறவு இலாகா, ரிஜிஸ்திராரின் முன் அனுமதி பெற்று, முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்பு பிராது செய்யவேண்டும். பிராது செய்யக் கோருமுன் பிரதிவாதிக்கு அது விஷயமாக நோட்டீஸ் அனுப்பி அவருடைய எழுத்து மூலமான சமாதானம் கோரப்பட வேண்டும். இந்த வழக்கிற்காக பிரதிவாதியை போலீசார், மாஜிஸ்திரேட் உத்திரவு இல்லாமல் அரெஸ்டு செய்யக்கூடாது. (செக்ஷன் 56)

அபராதம்: செக்ஷன் 53 படி சங்கத்திற்கு முன்பாத்தியமான சொத்தை அப்புறப்படுத்தியதாகத் தொடரப்படும் தாவாவில் ரூ. 200 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

"கோ-ஆபரேடிவ்" என்ற பெயரை அனுமதியின்றி உபயோகித்தால் முதலில் ரூ. 50 வரை அபராதம் விதிக்கப்படும். பின்பும் குற்றம் நீடிக்கப்பட்டால் அப்படி நீடிக்கப்பட்ட பிரதி தினத்திற்கும் ரூ. 5 அதிக அபராதம் விதிக்கப்படும். (செக்ஷன் 54)

மற்றபடி, சம்மனை எற்காமை அல்லது நிறைவேற்று நடவடிக்கையைத் தடைசெய்தல், தவறான தகவல்கள் கொடுத்தல் போன்றவைகளுக்கு ரூ. 50க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படலாம். (செக்ஷன் 55.)

## கூட்டுறவுச் சட்டப்படி சர்க்காருக்கு உள்ள அதிகாரங்கள்.

ரிஜிஸ்திராரை நியமித்து அவருக்கு அதிகாரங்களை வழங்குவது (செ. 3.) அவசியமான விதிகளைச் செய்வது (செ. 65), ஸ்டாம்பு ரிஜிஸ்தர் கட்டணங்கள் விஷயத்தில் சலுகை காட்டுவது (செ. 30), சங்கங்களுக்கு மான்யம் அளிப்பது (செ. 31), சங்கங்கள் கடன் வாங்குவதை சில சந்தர்ப்பத்தில் கட்டுப்படுத்துவது (செ. 32), கோ-ஆபரேடிவ் என்ற வார்த்தையை சங்கமல்லாதவர்கள் உபயோகிக்க அனுமதிப்பது (செ. 54), ரிஜிஸ்திரார் பிறப்பித்த உத்திரவுகளைப் பரிசீலனை செய்து உத்திரவு பிறப்பிப்பது (செ. 57), அவசியமான சந்தர்ப்பத்தில் பதிவு நிபந்தனைகளைத் தளர்த்துவது (செ. 59), கூட்டுறவுச் சட்ட நிபந்தனைகளை குறிப்பிட்ட சங்கங்கள் விஷயத்தில் தளர்த்துவது (செ. 60), செக்ஷன் 12, 44(2), 57-படி செய்யப்படும் அப்பீல்களை விசாரிப்பது ஆகியவைகள் சர்க்காரின் அதிகாரங்கள்.

## கம்பெனிச்சட்டம் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தாது.

கம்பெனிச்சட்டம் லாபத்திற்காக முதல் போட்டு நடத்தப்படும் கூட்டுக்களைக் கட்டுப்படுத்த ஏர்பட்ட சட்டம். ஆகவே அது லாபம் கருதாமல் அங்கத்தினர்களின் பொருளாதார அபிவிருத்திக்காக ஏழைகளால் நடத்தப்படும் கூட்டுறவு முயர்சிகளுக்குச் சற்றும் பொருந்தாது. இந்தக் காரணத்திர்காகத்தான் 1904 முதல் கூட்டுறவுச் சங்கங்களை கம்பெனிச் சட்ட அமுலிலிருந்து விலக்குப்படி கூட்டுறவுச் சட்டத்தில் ஒரு செக்ஷன் சேர்க்கப்பட்டு வருகிறது. இது பற்றிய ஷரத்து 1932வது வருஷ VI வது ஆக்ட் செக்ஷன் 61ல் காணப்படும்.

## 1932ம் வருஷத்திய கூட்டுறவுச் சட்டம் 1932க்குமுன் பதிவு செய்யப்பட்ட சங்கங்களை எப்படிக் கட்டுப் படுத்தும்?

கட்டுப்படுத்தும் என்ற ஷரத்து திட்டமாக இருந்தால்தான் கட்டுப்படுத்தும். 1932வது வருஷ VIவது ஆக்ட் செக்ஷன் 62ல் எர்கனவே 1912வதும் அதற்கு முந்தியும் உள்ள கூட்டுறவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இந்த 1932வது வருஷ சட்டப்படி பதிவு செய்யப்பட்டவைபோல் பாவிக்கப்படும் என்றும், அவைகளின் பைலாக்களில் 1932ம் வருஷம் VIவது ஆக்ட் விதிகளுக்கு முரண் இல்லாத எல்லா பாகங்களும் சம்பந்தப்பட்ட சங்கமகாசபை திருத்தாதவரை அப்படியே அமுலில் இருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

**விதிப்படி தேர்ந்தெடுக்கப்படாத கமிட்டியின் பதவியை ஆக்ஷேபிக்கலாமா? அவர்கள் செயல்கள் செல்லுபடியாகுமா?**

கூட்டுறவு இயக்கம் அதிகப் படிப்பில்லாத பல ஏழைகளை அங்கத்தினராக உடையது. அவர்களுக்கு கூட்டுறவுச் சட்டத்தின் சில நிபந்தனைகள் தெரிந்திராத காரணத்தால் மீட்டிங்கு கூட்டுதல், தேர்தல் நடத்தல், போன்ற விஷயங்களில் சில முறைத் தவறுகள் ஏற்படலாம். செக்ஷன் 63 அவ்வித மீட்டிங்கு தேர்தல்கள் முறைப்பிசகாக நடத்தப்பட்ட காரணத்தால் அவைகளில் தேரப்பட்ட உத்தியோகஸ்தர்கள் நல்லெண்ணத்துடன் செய்யும் காரியங்கள் செல்லுபடியாகாமல் போகாது என்று கூறுகிறது. இதன் நோக்கம் சங்கத்தின் உபகாரமான வேலைகள் தடைப்படக்கூடாது என்பதே. மற்றப்படி ஒழுங்கீனங்களை ஆதரிப்பது அல்ல. அக்கரையுள்ள அங்கத்தினர்கள் தேர்தல் அல்லது மீட்டிங்கு நடந்த இரண்டு மாதங்களுக்குள் ரிஜிஸ்திராரிடம் பிராது செய்துகொள்ள வேண்டும். (ரூல் XV)

## 1932-வது வருஷத்திய VI-வது சட்டத்தின்கீழ் உள்ள விதிகள் — (Rules).

**கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் விதிகளை, சர்க்கார் எப்படி ஏற்படுத்தலாம்? எவை பற்றி ஏற்படுத்தலாம்?**

கூட்டுறவுச் சட்டத்தின் கருத்துகளையும் நடைமுறைகளையும் தெளிவுபடுத்தி சட்டத்தை நன்கு, அமுல்செய்ய அவசியமான விதிகளை ஏற்படுத்த செக்ஷன் 65 (1) ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் அளித்துள்ளது.

எந்தெந்த விஷயங்களைப்பற்றி விதிகள் செய்யப்படலாமென்பது, செக்ஷன் 65 (2)ல் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. முக்கியமாக, சங்கம் கோரி மனுச் செய்யும்முறை, அங்கத்தினர் எடுக்கக்கூடிய பங்கின் அளவு, மத்திய பாங்கி நிர்வாகசபையின் அமைப்பு, சங்கங்கள், வைக்க வேண்டிய கணக்குகள், அனுப்பவேண்டிய அறிக்கைகள், செக்ஷன் 51-படி ஆர்பிட்ரேஷன் தாவா முறை, செக்ஷன் 57-படி நிறைவேற்றுமுறை, செக்ஷன் 47 படி லிக்விடேஷன் முறை, க்ஷேமநிதி ஏற்பாடு, விநியோகம். இவைபற்றியும் சங்க பைலாவில் காணப்படவேண்டிய பல விஷயங்களைப்பற்றியும் சர்க்கார் விதிகள் செய்யலாம்.

விதிகள் சாதாரணமாக ரிஜிஸ்திராரால் சிபாரிசு செய்யப்பட்டு சர்க்காரால் கெஜட்டில் பிரசுரிக்கப்படும். பிரசுரிக்கப்பட்ட நகல் நகலுக்கு சட்டசபைக்கு அனுப்பப்படும், ஆட்சேபணைகள் கவனிக்கப்பட்டு விதிகள் உறுதி செய்யப்பட்டு கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டதும் அவை அமுலுக்கு வரும்.

செய்யப்படும் விதிகள் சட்டத்திற்கு முரணாக இல்லாதவரை அவை சட்டம் போலவே செல்லுபடியாகும். (செக்ஷன் 65)

**"பைலா"—மாதிரி பைலாவை (Model Bylaw) ரிஜிஸ்திரார் தயாரிக்கும் காரணம்,**

பைலா என்பது ஒரு சங்கம் நடத்துவதற்காக ஏற்பட்ட விதிகள். ஆகவே, அது சங்கத்தின் அங்கத்தினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்டவரை, மனுதார் அல்லது அங்கத்தினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு ரிஜிஸ்திராரால் பதிவு செய்யப்பட்ட பின்னரே பைலா அமலுக்கு வரும். அப்படி ரிஜிஸ்திராரால் பதிவு செய்யப்பட்ட பைலாக்களை "ரிஜிஸ்தரான பைலா" என்று சொல்லுவது வழக்கம்.

கூட்டுறவுச் சங்கங்களின் பைலா கூட்டுறவுச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் முரண்படாமலும், சங்கத்தின் வேலைக்கு ஏற்றதாயும், கூட்டுறவுத் தத்துவங்களுக்கு இசைந்ததாயும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பைலாவை சங்கப் பதிவு கோரும் மனுதார்கள் சுலபத்தில் தயாரிக்க முடியாது. தவிர, அது சங்கத்திற்குச் சங்கம் வேறுபட்டிருந்தால் ரிஜிஸ்திரார் செய்யவேண்டிய மேற்பார்வை, தணிக்கைகள் சிக்கலானவைகளாய்விடும். இவைகளுக்காகத்தான் ரிஜிஸ்திரார் செக்ஷன் 65 & ரூல் iiல் சொன்ன விஷயங்களை அடக்கியதாய் அந்தந்த வகை சங்கத்திற்கும் ஏற்றதான மாதிரி (Model) பைலாக்களை தயாரித்துள்ளார். சங்கம் வேண்டும் என்று கோரும் மனுதார்கள் இந்த மாடல் பைலாவை ஏறத்தாழ ஒப்புக்கொள்வது அவசியம்.

### கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்யும் விஷயமாய் ரிஜிஸ்திரார் அனுசரிக்க வேண்டிய முறை.

1. சங்கம் வேண்டுமென்று கோரும் மனு அதற்கென்று ஏற்பட்ட நமூனாவில் முறைப்படி பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா? குறைந்த பக்ஷம் பத்துபேர் மனுவில் கையெழுத்து செய்துள்ளார்களா?

2. அதன் நோக்கங்கள் செக்ஷன் 4ல் சொல்லியுள்ளபடி அங்கத்தினர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றவையா?

3. சங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பு செக்ஷன் 4 படி அனுமதிக்கத் தக்கதா?

4. அந்த வகைச் சங்கத்திற்காக ரிஜிஸ்திரார் ஏற்படுத்தியுள்ள மாடல் பைலாவில் பங்குத் தொகை, பஞ்சாயத்தின் சங்கியைபோன்ற விபரங்களைப் பூர்த்திசெய்து மனுதாரர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்களா?

5. சங்கத்தைத் துவக்கி நடத்தும் முதல் நிர்வாகஸ்தர்களின் பெயர்கள் மனுவில் எழுதப் பட்டுள்ளதா?

என்பவைகளைக் கவனித்தபின்பு ரிஜிஸ்திரார் அந்த மனுவை வாங்கியனுப்பிய அதிகாரியின் ரிப்போர்டை கவனிப்பார். அதிகாரியின் ரிப் போர்ட்டிலிருந்து சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட் டால் நன்கு வேலை செய்யும் என்று தெரிந்தால், அவர் உடனே சங்கத்தை ரிஜிஸ்தர் செய்து, மனுதாரர்களுக்கு சங்க ரிஜிஸ்திரேஷன் சர்டிபி கேட்டையும், ரிஜிஸ்தரான பைலாவையும் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பிவைப்பார். (ரூல் iii)

**ஒரு சங்கம் ரிஜிஸ்தரானதற்கு அடையாளமாக ரிஜிஸ்திரார் ஆபீசில் வைக்கப்படும் ரிகார்டுகள்.**

1. ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கங்களின் பதிவு ரிஜிஸ்தரில் சங்கத்தின் முழுப்பெயரும் விலாசமும் எழுதிக்கொள்ளப்படும்.

2. பதிவைக் கோரி வந்த மனுவும், அத்துடன் வந்த பைலாகாபியும், ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பைலாவின் நகலும் ஆபீசில் ரிகார்டுகளாக வைத்துக்கொள்ளப்படும். (ரூல் iv)

பிற்காலத்தில் ரிஜிஸ்தர் செய்யப்படும் பைலாத் திருத்தங்களும் இத்துடன் சேர்த்து வைத்துவரப்படும்.

**சங்கங்கள் கட்டாயமாக வைக்கவேண்டிய கணக்குகள்.**

ஒவ்வொரு சங்கமும் என்ன கணக்குகளும், ரிஜிஸ்தர்களும் தவறாமல் வைக்கவேண்டும் என்பது ரூல் V-ல் விவரிக்கப்பட்டுள்ளது. அவைகளில் பலவும் எல்லா சங்கங்களுக்கும் பொதுவானவை.

அவை ரசிது-புஸ்தகம், வவுச்சர்-பைல், தினசரி சிட்டை. மெம்பர்கள் சேர்க்கைப்-புஸ்தகம், மீட்டிங்கு-நடவடிக்கைக்குறிப்பு, சங்கம் வெளியாரிடம் வாங்கியுள்ள கடன்களின் பெயரேடு, சங்கம் வாங்கிய ஆஸ்திகளின் பெயரேடு, மெம்பர்கள் டிவிடெண்டு ரிஜிஸ்தர் முதலியவை.

தவிர, கீழேகண்ட ரிஜிஸ்தர்கள் அந்தந்த சங்கங்கள் சிறப்பாக வைக்க வேண்டியவை.

**கிராம நாணயச் சங்கங்கள்.**

மெம்பர்கள் கடன் பெயரேடு, ஆஸ்தி பொறுப்பு பட்டி, மெம்பர்கள் கடன் பொறுப்பு (Liability) ரிஜிஸ்தர், மாதாந்திர வரவு-செலவுபட்டி.

**நகர நாணயச் சங்கங்கள்.**

இவை கிராம நாணயச் சங்கம் வைக்கும் புஸ்தகங்கள்தவிர மாதாந்திர வரவுசெலவுப் பட்டிக்குப் பதிலாக இனவாரிப் பெயரேடும் (General Ledger) வைக்கவேண்டும். மெம்பர்களின் ஆஸ்திப் பொறுப்பு ரிஜிஸ்தர் வைக்கத் தேவையில்லை. ரூ. 20000க்கு அதிகமான வேலை முதல்உள்ள சங்கங்கள் (Fluid Resources Register) என்பதையும் வைக்கவேண்டும்.

**வியாபார சங்கங்கள், உற்பத்தி சங்கங்கள்.**

இவை மேலே சொன்ன பொது ரிஜிஸ்தர்கள் தவிர சரக்குக் கொள்முதல் ரிஜிஸ்தர், சரக்குப் பெயரேடு, விற்பனைச்சிட்டு (Bill) கொள்முதல் ஆசாமிகளின் பெயரேடும் (கடன் விற்பனை இருந்தால்) மெம்பர்கள் வாங்கிய சாமான் கணக்கும் வைக்கவேண்டும்.

மற்ற சங்கங்கள் வைக்கவேண்டிய புஸ்தக விபரங்களுக்கு ரூல் 5ஐ பார்க்கவும்.

**கூட்டுறவுச்சங்கம் பிரதி வருடமும் ரிஜிஸ்திராருக்கு அனுப்பி வைக்கவேண்டிய அறிக்கைகள், அவைகளை அனுப்பத் தவறி விட்டால் என்ன ஏற்படும்?**

பிரதி கூட்டுறவுச் சங்கமும் கூட்டுறவு வருஷம் முடிந்த 15 நாட்களுக்குள் கீழ்கண்ட அறிக்கைகளை ரிஜிஸ்திராருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று ரூல் VII கூறுகிறது.

1. வருஷாந்திர வரவு-செலவு ஸ்டேட்மெண்டு.

2. வருஷாந்திர லாப-நஷ்ட ஸ்டேட்மெண்டு.

3. வருஷக்கடைசியில் உள்ளபடி சங்கத்தின் ஆஸ்தி-பொறுப்புகளைக் காட்டும் ஸ்டேட்மெண்டு தவிர அவ்வப்பொழுது ரிஜிஸ்திரார் கோரும் இதர ஸ்டேட்மெண்டுகளையும் சங்கம் அனுப்பிவைக்கவேண்டும். வியாபார கைத்தொழில் சங்கங்கள் ஷை ஸ்டேட்மெண்டுகள் தவிர வருஷக்கடைசியில் உள்ள சரக்குகளின் இருப்பு மதிப்பு ஸ்டேட்மெண்டும், (Stock Statement) வியாபாரக் கணக்கு (Trading Account) ஸ்டேட்மெண்டும் தயாரித்து அனுப்ப வேண்டும். இப்படி அனுப்பவேண்டிய ஸ்டேட்மெண்டுகளை ஒரு சங்கம் நீடித்து அனுப்பத் தவறிவிட்டால் ரிஜிஸ்திரார் ஒரு சிப்பந்தியை சங்கத்திற்கு அனுப்பி அந்த ஸ்டேட்மெண்டைத் தயாரித்துவிட்டு, அவருடைய சம்பளம் இதர

காப்பக நூலகம்
137734

செலவுகளை சங்கத்தினிடமிருந்து வசூலித்து விடுவார்.

**வருஷாந்திர ஸ்டேட்மெண்டுகள் அனுப்புவது.**

1. இந்த ஸ்டேட்மெண்டுகளில் உள்ள தகவல்களைக் கொண்டு ரிஜிஸ்திரார் தமது வருஷாந்திர அறிக்கையைத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்புகிறார்.

2. ஆடிட்டர் அனுப்பும் ரிபோர்ட் இத்துடன் ஒத்துப்பார்க்கப் படுகிறது. வித்தியாசங்கள் காணப்பட்டால் அவைகள் சரிசெய்யப்பட்ட பின்பே ஆடிட் சர்ட்டிபிகேட் வெளியிடப்படும்.

**ஒரு மெம்பர் சங்கத்தின் இதர மெம்பர்களின் ஜாபிதாவைப் பெறமுடியும்.**

செக்ஷன் 26படி ஒவ்வொரு சொஸைடியும் தனது மெம்பர்களின் ரிஜிஸ்தர் வைத்துவர வேண்டும். ஒவ்வொரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய சங்கமும் பிரதி வருஷ முடிவிலும் அதன் மெம்பர்களின் ஜாபிதாவை ரிஜிஸ்திராருக்கு அனுப்பிவைக்கவேண்டும். [ரூல் VII (6)] இந்த மெம்பர்களின் ஜாபிதாவை ஒரு மெம்பர் பார்க்கவும் நகலை அதன் கட்டணம் செலுத்திப் பெறவும் உரிமை உண்டு.

சங்கங்களின் கடன் வாங்கும் அளவை ரிஜிஸ்திரார் தமது உசிதம் போல் நிர்ணயிப்பது.

ஒரு சங்கம் அதன் பைலாவிற்கண்ட அளவிற்கண்ட அளவிற்குமேல் கடன்வாங்க முடியாது (செ. 33). சங்கத்தின் மாதிரி பைலாவைத் தீர்மானிக்கும் அதிகாரம் செ. 65 & ரூல் VII படி ரிஜிஸ்திராருக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே அவர் ஒவ்வொரு வகை சங்கத்தின் கடன் வாங்கும் அளவையும் நிர்ணயிக்கும் அதிகாரம் உள்ளவராயிருக்கிறார்.

சங்கங்கள் கூட்டுறவுத் தத்துவப்படியும் நல்ல முறையிலும் வேலை செய்யும்படிப் பார்த்துக் கொள்ளும்படி பொறுப்பு ரிஜிஸ்திராருக்கு உள்ளதால் அவருக்கு ஒரு சங்கம் எவ்வளவு கடன் வாங்கலாம் என்பதை நிர்ணயிக்கவேண்டிய உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் கடன் வாங்கும் அளவு ஒவ்வொரு சங்கத்தின் 18வது பைலாவில் குறிக்கப்பட்டிருக்கும். அது வரையறுக்கப்படாத சங்க விஷயத்தில் மெம்பர்களின் நிகர ஆஸ்தியைப் பொறுத்தும், வரையறுக்கப்பட்ட சங்க விஷயத்தில் சங்கத்தின் தொழில் - தேவையைப் பொறுத்தும் ரிஜிஸ்திராரால் நிர்ணயிக்கப்படுகிறது. நகர நாணயச் சங்கங்களுக்கு, செலுத்தப்பட்ட பங்குத்தொகை & க்ஷேமநிதியைப் போல 5-பங்கு, ஸ்டோர்களுக்கு 3-முதல் 5-பங்கும், மகசூல் கடன் சங்கங்களுக்கு 10-க்கு மேற்பட்ட அளவும் ரிஜிஸ்திராரால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்.)

**கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினு-விடை**

ஆசிரியர்

**K. ஸ்ரீநிவாஸன் M. A.**

(தஞ்ச ஹூவிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும், 1934ஆம் வருடத்திய நில அடமான பாங்கிகள் பற்றிய சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் வினு-விடை முறையில் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், மெம்பர்களும் கட்டயமாக வைத்துக் கொள்ளவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. 1—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:— K. சீனுவாசன் M. A.

ஹூவிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**

**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**




தயாரிப்பவர்:—

இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

# 'ஜெயராம்' ஹெர்ணியா கியூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்.**


3-தினத்தில் குணம் தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| எலிமெண்டரி கேஸ் | .... | ரூ. | 6-0-0 |
| செகண்டரி கேஸ் | ... | ரூ. | 11-0-0 |
| அட்வான்ஸ் கேஸ் | .... | ரூ. | 25-0-0 |

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

**G. ஜெயராம் வைத்தியசாலை,**

28, காசிவிஸ்வநாதர் கீழவிதி, :: கும்பகோணம்.




**Attarwalla Chawll, Mori Road, Mahim Bombay, 4-2-48.**

ஐயா, எனக்கு தாங்கள் அனுப்பிய ஹெர்ணியா கியூர் சகலவிர்த்தினியும், நான் இன்னுன்வரை அருந்தினேன். ஆனல் இன்றுதான் காயசுத்தி பஸ்பம் சாப்பிடுகிறேன். லேகியத்திலேயே எனக்கு இருந்த விதைப்பையில் வீங்கிக்கொண்டிருந்த காற்று குறைய தொடங்கிவிட்டது. இன்னும் பஸ்பம் சாப்பிடுவதற்குள் அநேகமாக பேர்பாதிக்கு மேல் சுத்தமாகிவிடுமென்று நம்புகிறேன். இம்மருந்தை சாப்பிட்டு முடிந்ததும் இன்னும் 1 டின் ஹெர்ணியா கியூர் வரவழைத்து சாப்பிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். எத்தனையோ வைத்தியர்கள் கைவிட்ட இவ்வியாதிக்கு உயிருக்குத்துணிந்தே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் உங்கள் விளம்பரத்தைக்கண்டு இதை கடைசி தடவையாய் பார்த்து விடலாம் என்று முழுமனமில்லாமல்தான் தங்களின் மருந்தை வருத்தினேன். ஆனல் இன்றுதான் அதன் மகிமையை உணர்ந்து அளவிலா சந்தோஷமடைகிறேன்.

இப்படிக்கு,

**K. S. ஷண்முகம்,** பாம்பே.

Regd. No. M. 5399 "THE VAKIL" September 1954

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.